LIBRARIAN'S OFFICE
RECEIVED
20 JUN 2017
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
28 JUN 2017
PERIODICALS DIVISION

2017 ஜூன் அணி 12 படை 10
விலை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்

## இயற்கை அனர்த்தத்தின் போது உதவிக் கரங்களை நீட்டிய மக்கள் விடுதலை முன்னணி



# வெள்ளப் பெருக்கிலும் அரசாங்கம் தோல்வி

## அனர்த்த முகாமைத்துவம் பெயரளவில் மட்டுமே

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் எட்டு மாவட்டங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கு மண்சரிவு போன்ற நிலைமைகளால் பாதிக்கப்பட்ட சுமார் 05 இலட்சத்திற்கு அதிகமான மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கூட்டரசாங்கம் சகல வழிகளிலும் தமது இயலாமையை வெளிப்படுத்தியுள்ளதெனவும் மக்கள் விடுதலை முன்னணியின் செந்தாரகை நிவாரண படையணி உள்ளிட்ட தொண்டர் அமைப்புகளின் உதவியில்லாவிட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பர் என்பது தெரியவருகிறது.

விஷேடமாக அனர்த்த நிலை ஏற்பட்ட நிமிடத்திலிருந்து துரிதமாக செயற்படுவதற்கு அரசாங்கம் தோல்விகண்டதுடன் அரச அதிகாரிகளுக்கு அது தொடர்பில் உடனடியாக தலையிடுவதற்கு நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அவசர அனர்த்த நிலையை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அனர்த்த நிலைக்கு முகம் கொடுப்பதற்கு தேவையான செயற்திட்டத்தை முன்னெடுப்பதில் அரசாங்கத்தில் மேல்மட்டத்தில் போதுமான கவனத்தில் எடுக்கவில்லையென்பது தெரியவருவதாவது அனர்த்த நிவாரணத்திற்கு உரிய அமைச்சர், பிரதமர் போன்ற கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க வேண்டிய அதிகாரிகள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்ததே இதற்கான காரணமாகும். வேறு ஒரு நாட்டில் இவ்வகையான அனர்த்தம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகள் தமது தனிப்பட்ட பயணத்தை இரத்துச் செய்துவிட்டு நாட்டுக்கு திரும்புவர். ஆனால் நமது நாட்டின் அரசியல்வாதிகள் அப்படிச் செய்யவில்லை, அதாவது அவர்கள் மக்கள் மீது கொண்டிருக்கும் அசமந்தப்போக்கே அதற்கான காரணமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பதில் அரசபடைகள் நிவாரணம் வழங்கும் நடவடிககையும் அரச அதிகாரிகளின் தனிப்பட்ட தலையீடு இருந்த இடங்களில் இடம்பெற்ற விஷேட தலையீட்டைத் தவிர இந்த இயற்கை அனர்த்தத்தின்போது அரசாங்கம் என்ற வகையில் பங்களிப்பு போதுமானதாக அமையவில்லை. அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் தனியார் ஊடகங்கள் மேற்கொண்ட நிவாரணத்தை தேடிப்பார்ப்பதை தவிர வேறு வேலை இருக்கவில்லை.


இதன்போது கடந்த காலம் முழுவதிலும் இல்லாதுபோன அதிகாரத்தை மீள பெற்றுக்கொள்ளப்போவதாக கூறிக்கொண்டு அலைந்து திரியும் முன்னாள் ஜனாதிபதியும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செய்தது எதுவும் கிடையாது அதிலிருந்து தெரியவருவதாவது அவருக்குத் தேவைப்படுவதெல்லாம் அதிகாரமும் பதவி பேராசையே தவிர வேறு ஒன்று கிடையாது. அனர்த்தம் ஏற்பட்ட சில நாட்களுக்கு பின்னர் தண்ணீரில் இறங்கி நிற்கும் படத்தை காட்சிப்படுத்துவதைத் தவிர வேறு எதையும் அவரால் செய்ய முடியவில்லை. முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கும்

11ம் பக்கம் >>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARIAN'S OFFICE RECEIVED 20 JUN 2017 LIBRARY UNIVERSITY OF JAFFNA

# இனவாத முறுகல் நீடித்தால் மக்கள் வீதியில் இறங்குவதை தவிர்க்க முடியாது



நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம் மக்களும் எமக்கு எப்போது என்ன நடக்கும் என்ற அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்க நேற்று சபையில் தெரிவித்தார்.

இனவாத முறுகலை முடிவுக்கு கொண்டுவராத நிலைமை தொடருமாயின் மக்கள் வீதியில் இறங்கி இரத்தம் சிந்துவது நிச்சயம். அதனையா அரசாங்கம் விரும்புகின்றது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.


பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நிலையியற் கட்டளை 23 கீழ் இரண்டில் கேள்வி எழுப்பிய மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுர குமார திஸாநாயக்க தொடர்ந்தும் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் மீளவும் இனவாத, மதவாதம் மீளவும் தலைதூக்கியுள்ளது. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் முறுகல் நிலையை தோற்றுவிப்பதற்கு சில குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இதன்படி இனவாத நோக்கத்துடன் முஸ்லிம் பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள் தாக்கப்படுகின்றன. 30 வருட யுத்தத்திற்கு முகங்கொடுத்து இரத்தமும் கண்ணீரும் சிந்திய அனுபவத்தை கொண்ட நாம் மீளவும் அவ்வாறான நிலைமையை ஏற்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. எனினும் இந்த தாக்குதல்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தற்போது இனவாத நடத்தைகளுக்கு அரசாங்கம் உடந்தையாக செயற்படுவதாகவே தெரிகின்றது. இதன்படி வில்பத்து வன அழிப்பு, காணிப் பிரச்சினை தீர்வு, தொல்பொருளியியல் இடங்கள் தொடர்பான பிரச்சினை, முஸ்லிம்களின் வர்த்தக மற்றும் பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்க்கப்படவில்லை. இரு தரப்பிலும் இருக்கும் இனவாதிகளினால் இந்த நாடு பல விளைவுகளை சந்தித்துள்ளது. அளுத்கம பிரதேசத்திலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. எனவே இந்த பிரச்சினை தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அரசாங்கம் இதனை நடக்கவிட்டு பார்க்கின்றது. முஸ்லிம்களுக்கு எதிராக வர்த்தக நிலையங்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது முஸ்லிம்கள் எம்க்கு எப்போது என்ன நடக்கும் என்ற அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலைமை தடுக்க ஏன் அரசு தலையிடவில்லை எத்தனை வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன? இனவாதத்தை தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளன. எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும். இனவாத முறுகல் நிலையை அரசாங்கம் முடிவுக்கு கொண்டுவராமல் அரசாங்கம் தொடர்ந்து செயற்படுமாயின் மக்கள் பொல்லுகளுடன் வீதியில் இறங்கி இரத்தம் சிந்தும் அபாயம் ஏற்படும். இதற்கு தான் அரசாங்கம் விருப்புகின்றதா என்றார்.

## பிமல் ரத்நாயக்க ரஷ்யாவின் நாசிப் படைகளைத் தோற்கடித்த வெற்றி விழாவில்...



சோவியத் சோஷலிசப் புரட்சியின் 100வது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலக ஜனநாயக இளைஞர் சம்மேளனத்தின் முனனேற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க ரஷ்யாவிற்கு விஜயம் செய்திருந்தார். அதன்போது அவ்வமைப்பின் நடவடிக்கைகளுக்காக ரஷ்ய தேசிய ஏற்பாட்டுக் குழுவுடன் சேர்ந்து செயற்திட்ட நடவடிக்கைகளை தயாரித்ததுடன், 1945 மே 09 ம் திகதி சோவியத் இராணுவத்தினால் ஜெர்மன் நாசிப் படைகளை தோற்கடித்த வெற்றியைக் கொண்டாடும் விழாவிலும் கலந்துக் கொண்டார். அதன் பட்த்தையே இங்கு காண்கிறீர்கள்.

## உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தவிசாளர் குழு கியூபாவில்




கடந்த மே 3-4ம் திகதிகளில் கியூபாவின் தலைநகர் ஹவானாவில் இடம்பெற்ற உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தவிசாளர் குழு கூட்டத்திற்கு இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து சோஷலிச தொழிலாளர் சங்கத்தின் சட்டத்தரணி தோழர் ஜானக அதிகாரி கலந்துக்கொண்டார். தென்னாப்பிரிக்காவில் ஒர்ஸ்மசில் நடைபெற்ற தொழிற்சங்க சம்மேளனத்தில் தோழர் ஜானக அதிகாரி அதன் தவிசாளர் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் 40 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த தவிசாளர் குழுவில் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு கடந்த 19 - 20ம் திகதிகளில் இந்தியாவில் சென்னையில் இடம்பெற்றது. அதில் சோஷலிச தொழிலாளர் சங்கத்தின் சார்பாக தோழர் மகிந்த ஜயசிங்கவும் அகில இலங்கை தோட்டத் தொழிலளர் சங்கத்தின் தலைவர் தோழர் செல்வராஜ் அவர்களும் தோழர் ஜானக அதிகாரி அவர்களுடன் கலந்துக் கொண்டனர்.

## இப்போது நாட்டுக்குத் தேவை கொள்கை மாற்றமாகும்

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க**

கெபினட் மாற்றம் ரணில்-மைத்திரி கூட்டின் போலி நாடகமென கூறிய ஜே.வி.பி தலைவர் தோழர் அனுர திசாநாயக்க எவ்வாறாயினும் நாட்டிற்கு இப்போது தேவைப்படுவது அமைச்சரவை மாற்றமல்ல பின் பற்றப்படும் கொள்கைகளில் மாற்றமே தேவையென வலியுறு த்தினார்.

அவர் இக்கருத்தை கடந்த மே 22ம் திகதி ம.வி.மு தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதைத் தெரிவித்தார்.

"இந்த அரசாங்கம் ஆட்சிபீடமேறும்போது ஊழலில், மோசடியில் ஈடுபட்டவர்களை கைது செய்து விசாரித்து தண்டனை வழங்குவதாக வாக்குறுதியளித்தது. நமது நாட்டில் இளைஞர் யுவதி களுக்கு தாங்களது கல்வித் தகமைக்கு ஏற்ற சம்பளத்துடனான தொழிலை வழங்குவதில் அரசாங்கம் தோல்விக் கண்டுள்ளது. அதேபோன்று கடன் பொறியில் சிக்கியிருக்கின்ற நாட்டை அதிலிருந்து மீட்பதாக கூறினர். ஆனால் அதற்குப் பதிலாக நமது நாட்டை மேலும் கடன்பொறியில் சிக்கவைத்துள்ளனர். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதாக கூறியபோதிலும் அது இன்று சிதைக் கப்பட்டுள்ளது. போதைபொருள் குறைப்பதற்குப் பதிலாக இன்று அது அதிகரித்திருக்கிறது. அதனால் அரசாங்கத்தின் இரண்டரை வருட ஆட்சியில் தாம் அளித்த வாக்குறதி ஒன்றையேனும் நிறைவேற்ற முடியாது தோல்விக்கண்டுள்ளது.

தற்போது பல்கலைக்கழகங்களில் ஒரு சில பீடங்கள் மூடப்பட்டு மூன்றரை மாதங்கள் ஆகின்றன. எந்தத் தீர்வும் கிடையாது. பாதாள கும்பலுக்கும் பொலிசுக்குமிடையிலான துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் மரணிக்கிறது. சாதாரண மக்களுக்கு வாழ முடியாத அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊழல், மோசடி அதிகரித்துள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சரவை மாற்றமெனும் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் ஜனாதிபதி செய்ததாக கூறப்படும் அவரது உரை ஊடகங்களில் வெளியாகின. "மக்களிடையே புதிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துவதே எமது குறிக்கோள்" என்பது ஒரு போதும் நிறைவேறாத வாக்குறதிகளாகும்.

19வது அரசியல் திருத்ததிற்கு அமைய அரசாங்கத்தின் அமைச்சரவை 30க்கும் பிரதியமைச்சர் பதவி 40க்கும் வரையறுப்பதாக பிரேரணை நிறைவேறற்ப்பட்டது. ஶ்ரீலசுக - ஐதேக கூட்டுச் சேர்ந்ததன் விளைவாக 2015 செப்டம்பர் 01ம் திகதி பாராளுமன்றத்தில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. அமைச்சர்கள் 30ல் இருந்து 48 வரையிலும், இராஜாங்க அமைச்சர்கள் 40 இருந்து 45 வரையிலும் அதிகரிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால் இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டிருப்பதே பதவிகளை பகிர்ந்துக் கொள்வதற்கேயாகும். புதிய அமைச்சரவை மாற்றத்திலும் அதுவே நிருபணமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் வெளியீடு
464/20, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுள்ள.
Tel:0112-785612, E-mail niyamuwanews@gmail.com


## இனக்குரோதத்தை பரப்புவோர் குறித்து கண்டும் காணாமலும் இருக்கும் அரசாங்கம்

இனவாதமும் மத அடிப்படைவாதமும் எந்த வடிவத்தில் வந்தாலும் அது சமூக உடலுக்கு புற்றுநோயைப் போன்றதாகும். இன மற்றும் மதவாத அடிப்படைவாத "புற்றுநோய்" உலகம் முழுவதும் இருப்பது போன்றே இலங்கையிலும் இருக்கிறது. மக்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்காக மேற்கூறிய புற்றுநோயை அகற்ற வேண்டியுள்ளபோதும் அதன் பிரதான பொறுப்பாக இருப்பது முதலாளித்துவ அரசாங்கத்தின் கைகளிலே ஆகும். தூங்கள் கொண்டு நடித்துக் கொண்டிருக்கும், அரசாங்கம் இடைக்கிடையே விழித்தெழுந்ததாக நடித்து அறிக்கைகளை விட்டு மீண்டும் நித்திரைக்குச் செல்கிறது. அந்த நிலைமையின் கீழ் ஒவ்வொரு விதமான இனவாதம், மத அடிப்படைவாதமும் ஒன்றுடன் ஒன்று போஷிக்கப்பட்டு வளர்ந்து வருகிறது. அது மனித சமூகத்தின் இருப்பிற்கு மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளப்போதும் அதை சுதந்திரமாக வளர்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த பாரிய பிரச்சினைக்கு இடமளித்து கண்களை மூடிக்கொண்டிருக்கும் அரசாங்கமும் பொறுப்பு கூறியாக வேண்டும். இனவாதமும் மத அடிப்படைவாதமும் இலங்கையைப் போன்றே உலகம் முழுவதிலும் நிலவுகிறது. அது உலகத்திற்கும், சமூகத்திற்கும் மனித உயிர்களுக்கும் ஏற்படுத்தும் பாதிப்பு அபரிமிதமானதாகும். ஆனால் இனவாதத்தாலும் மத அடிப்படைவாதத்தாலும் ஏற்படும் பாதிப்புகள் வெறிபிடித்தவர்களுக்குப் புரியாது. இந்த அழிவுமிக்க, பிற்போக்கு, மனநிலை உலகம் முழுவதிலும் நிலவுவதற்கான பிரதான காரணங்கள் பலவுள்ளன. அதாவது வரலாற்று ரீதியாக மனிதர்கள் மதங்களுக்கும், தேசிய இனங்களுக்கும், முக்கியத்துவம் கொடுத்து தமது இனம், மதம் ஆகியன மற்றவர்களைவிட உயர்வாகக் கருதிக்கொண்டும் அதை விளம்பரப்படுத்தியும், அதை மற்றவர்கள் மீது திணிக்கின்ற மனநிலையும் தேசிய மற்றும் மத தனித்துவத்தினால் சிறைப்படுகின்ற மனநிலையும் இதற்கான காரணமாக அமைகிறது.

மறுபுறத்தில் உலகலாவிய ரீதியில் ஏகாதிபத்தியவாதமும் தேசிய மட்டத்தில் அந்தந்த நாடுகளில் வங்குரோத்தடைந்த முதலாளித்துவ தலைவர்களும் மனிதர்களின் இந்த மனநிலையை தமது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்தி வருவது இன்னுமொரு காரணமாகும். மத்திய கிழக்கில் தமது அரசியல் அதிகாரத்தை கொண்டு செல்வதற்கு ஐக்கிய அமெரிக்கா இஸ்லாம் அடிப்படைவாதத்தை போஷிக்கிறது என்பது யாவரும் அறிந்த விடயமாகும். அவர்கள் இப்போதும் அதையே செய்து வருகின்றனர். இலங்கை போன்ற நாடுகளில் முதலாளித்துவக்கட்சித் தலைவர்கள் தமது வாக்கு வங்கியை நிரப்புவதற்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் பயன்படுத்துகின்றனர்.

அதேபோன்று முதலாளித்துவ சமூகத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் அதனால் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் அப்பாதிப்புக்கான காரணத்தை இனங்காண்பதற்கு அவர்களால் முடியாதுள்ளது. அதனால் தமது ஒடுக்குமுறைக்கான காரணமாக தவறான கருத்தியலை புரிந்து கொள்கின்றனர். அதேபோன்று சமூகத்தில் அடிக்கடி கிளர்ந்தெழுந்து வெடித்துக் சிதறும் ஒரு மார்க்கம் தான் இனவாதமும் மத அடிப்படைவாதமுமாகும். அதனால் இனவாதம் மற்றும் மத அடிப்படைவாதமாக வெடித்துச் சிதறுவது வேறு ஒன்றுமல்ல முதலாளித்துவத்தின் வர்க்க ஒடுக்குமுறையாகும்.

இலங்கையில் கடந்த காலத்தில் நிலவிய சிங்கள, தமிழ், இனவாதம் அதன் உச்சக்கட்டமாகவே 83 கறுப்பு ஜூலை உருவானது. அதன் விளைவாக உருவானதே 30 வருட இனவாத யுத்தமாகும். அந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் இனவாதத்தை பரப்பியோரல்ல அதற்கு பலியானோர் தமிழ், சிங்கள,முஸ்லிம் மக்களாகும்.

தற்போது அண்மைக்காலமாக இடைக்கிடையே சிங்கள, முஸ்லிம் இனவாதத்தையும் மத அடிப்படைவாத கருத்தியலுடன் பரப்புவதற்கு இரண்டு சாராகும் முயன்று வருகின்றனர். பௌத்த மதத்தினதும் இஸ்லாம் மதத்தினதும் உண்மையான போதனைகளை பொருட்படுத்தாது அவைகளை இரட்டிப்புச் செய்து இனவாத மற்றும் மதவாத வெறிபிடித்த போராட்டத்திற்கு இந்த அடிப்படைவாத கும்பல் போட்டியிட்டு வருகின்றனர். இந்த வெறிக்குப் பின்னால் வங்குரோத்தடைந்த முதலாளித்துவ அரசியல் தலைவர்களும் வியாபாரிகளும் மறைந்திருக்கின்றனர். அதற்கிடையே சமூகத்தில் தோன்றும் சில சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு அரசாங்கம் தலையிடாததினாலும் அவைகளை இனவாத அர்த்தத்தில் விபரித்து அடிப்படைவாதத்தைப் பரப்புவதற்கு அடிப்படைவாத வெறிக்கு ஆளானோர் செயற்படுகின்றனர்.

## இனியும் இயற்கை அனர்த்தம் ஏற்படாதிருக்க வேண்டுமென்றால்



இயற்கை அனர்த்தங்களைத் தடுக்க முடியாது. ஆனால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம் தொடர்பில் போதுமான அளவு தயார் நிலையில் இருந்திருப்போமானால் பல உயிர்களை பாதுகாத்திருக்க முடிந்திருக்குமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. மே மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு தொடர்பில் அவதானிக்கையில்,

மே 19ம் திகதி அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட அறிக்கையில் இறந்தவர்களின் தொகை 169 வரை அதிகரித்திருப்பதாகவும் 102 பேர் காணாமல் போயும் 88 பேர் காயமடைந்தும் உள்ளதாக தெரியவருகிறது. மேலும் 5 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் வெள்ளபெருக்கு மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 400 வீடுகள் முற்றாக சேதமடைந்திருப்பதாகவும், 4000 வீடுகள் அரைவாசி சேதமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு, குப்பை மேடு சரிந்து வீழ்ந்த சம்பவங்கள் போன்றவற்றை உற்று நோக்கும்போது இந்த அனர்த்தத்தாலும் பெண்களும் சிறு பிள்ளைகளுமே கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதாரப் பிரச்சினை போன்றே பெண்கள், சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பிலும் இவ்வாறான அனர்த்தத்தின்போது கூடுதலான இன்னல்களுக்கு ஆளாகியோர் பெண்களாவர். தற்போது ஏற்பட்டிருக்கும் அனர்த்த நிலை காரணமாகத் தாங்களது இருப்பிடங்களை இழந்து மக்களின் சுமுக வாழ்க்கை முற்றாகவே செயலிழந்துப் போயுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாட்டு ஆட்சியாளர்கள் போதுமான நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. அது 2004ல் ஏற்பட சுனாமி அனர்த்த நிலையின்போது நிருபணமானது. அதன் பின்னர் மீறியபெத்த அனர்த்தம், அதேபோன்று கேகாலை அரநாயக்க பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு அனர்த்தத்தின்போதும் அரசாங்கம் போதிய கவனமெடுத்து அம்மக்களின் வாழ்க்கையை சுமூகநிலைக்குக் கொண்டுவரவில்லை. அதை விடக்கவலைக்கிடமான நிலை என்னவெனில் அண்மையில் மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்து விழுந்த பலர் உயிரிழந்தும் இன்னும் சிலர் காணாமல்போயும் உள்ளனர். அதாவது மீதொட்டமுல்லை அனர்த்தம் ஏற்படும் முன்னரும் பின்னரும் ஆட்சியாளர்கள் செயற்பட்ட விதம் மக்களுக்கு நன்கு தெரியும். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் அரசாங்கமும் அனர்த்தம் ஏற்பட்டவுடன் பிரச்சினைகளுக்கு உடடியாகக் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக ஒருவரின் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டு பொறுப்பிலிருந்து மீண்டும் தமக்கு சாதகமான நடவடிக்கைகளையே முன்கொடுத்தனர். மீதொட்டமுல்லை குப்பை மேடு அருகில் அவதான நிலையம் இருந்தபோதிலும் அப்பிரதேச மக்கள் இன்னமும் குப்பை மேட்டின் அருகில் வசித்துவருவதிலிருந்து இதை மேலும் நன்றாக விளங்கிக் கொள்ள முடியும். இருந்த இருக்கின்ற அரசாங்கங்கள் அபிவிருத்தி எனும் பெயரில் செய்த முட்டால் தனமான செயற்பாடுகளாலும் ஒரு சில அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தைப் பிரயோகித்து மேற்கொள்ளப்பட்ட மரம் வெட்டுதல், காணிகளைக் கைபற்றுதல், மண் வெட்டுதல், இவ்வாறான சுற்றாடல் அழிவுகளும் இந்த இயற்கை அனர்த்தங்களின் பாதிப்பை அதிகப்படுத்துவதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

பல்வேறு விதமான சூழலில் காலநிலை மாற்றங்களை முன்னரே இனங்காணக்கூடிய தொழிநுட்ப உபகரணங்களைக் கொண்டு வருவதைத் தவிர்த்து அரச அதிகாரிகள் மேலும் அதிக பலத்துடனும் துரித கதியிலும் அரசியல்வாதிகளின் சொகுசு வாழ்க்கையை மேலும் வளமாக்குவது எப்படி என்பதைப் பற்றியே அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். காலநிலை மாற்றத்தை நேரத்துடன் அறிவிக்கக்கூடிய அவ்வகையான வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப உபகரணங்கள் எம்மிடமில்லை. அவ்வகையான உபகரணங்களை கொண்டு வருவதற்கு நிதி ஒதுங்குவதை நினைத்துக்கூடப் பார்க்காத முதலாளித்துவ ஆட்சியாளர்களின் தலைமை அமைச்சர்களுக்கு அதிகசுகபோக வாகனங்களை கொண்டு வருவது எப்படி என்பதைப் பற்றியே சிந்திக்கின்றனர். சுற்றாடலை பாதுகாத்தல், குப்பை முகாமைத்துவம், இயற்கை அனர்த்தம் மட்டுமல்ல பொருளாதார, சமூக, அரசியல் கலாச்சாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கடந்த 69 வருடத்தினால் தோல்வியே கண்டுள்ளனர். மக்களாகிய நாம் இவ்வகையான அரசியல்வாதிகளை பாராளுமன்றத்திற்கு, மாகாண சபை உள்ளிட்ட ஏனைய நிர்வாக சபைகளுக்கு வாக்களித்து நமது பிரதிநிதிகளை அனுப்பியமை தொடர்பில் நாம் வெட்கப்பட வேண்டும். வெட்கப்படுவது மட்டும் போதாது. அவர்களின் இயலாமையை நீண்டகால வரலாற்று அனுபவங்களால் புரிந்துக் கொள்ள வேண்டும்.

நமது சிந்தனையில் சூழப்பதிந்துள்ள பிற்போக்கான தடைகளை அகற்றி நாளைய எமது சந்ததியினருக்கு நல்லதோர் சமுதாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை நாம் தோழ் மீது சுமக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 அடி ஆழமான சுரங்க வீட்டில் இருந்தாலும் சரியான கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க

### (வெளிநாட்டு அமைச்சின் தூதுவர் சலுகைகள் பற்றிய சட்டமூலம் தொடர்பான விவாதத்தில்)

இன்று விவாதிக்கப்படுவரும் தலைப்புடன் நேரடியாக தொடர்பு இல்லாவிட்டாலும் வெளிநாட்டு அலுவல்கள், கொள்கைகள் தொடர்பில் ஒரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இலங்கை அரசாங்கம் தமது பாலஸ்தீனம் தொடர்பிலான கொள்கையில் மிகத் தெளிவான மாற்றங்களை செய்திருக்கிறது. நாங்கள் அதுபற்றி இந்நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கின்றோம்.


பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரத்தில் சகல மதங்களுக்கும் விசேடமாக இஸ்லாம் மதத்திற்கு, கத்தோலிக்க மதத்திற்கு மற்றும் யூத மதத்திற்குரிய பொதுவான வணக்கஸ்தலமாகக் கருதப்படும் இடமொன்று இருக்கிறது. அதை அல்-அக்ஸா பள்ளியென்று அழைக்கப்படுகிறது. அந்தப் பள்ளிக்கு, மத ஸ்தலத்திற்கு- எதிராக அதை அழிப்பதை நோக்கமாகக் கொண்டு இஸ்ரவேல் பல வருடங்களாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிலும், யுனெஸ்கோவிலும் 1907ம் ஆண்டு முதல் உலகில் பல பெரும்தொகையான நாடுகளும் இந்த சரித்திரமிக்க மரபுரிமையை அழிக்க வேண்டாமென கூறியிருக்கிறது.

1907ல் ஹேக் நகரத்தில் இடம்பெற்ற உலக கலாசார பெறுமதிகளை பாதுகாப்பது பற்றிய மாநாட்டிலிருந்து நூறு வருடங்களுக்கு மேலான காலத்தில் அடிப்படைவாத நிராகரிக்கப்பட்ட இரண்டு கோஸ்டிகளைத் தவிர- உலகில் பெரும்பாலான நாடுகள் இதை அழிப்பதற்கு எதிராக வாக்களித்து வருகிறது. இப்போது அந்த இடத்தில் என்ன செய்யப்படுகிறது?

இஸ்ரவேல் அரசாங்கம் அந்த பள்ளிக்கு அடியில் சுரங்கமொன்றை தோண்டுகிறது. இப்போது நூறுக்கணக்கான சுரங்கங்கள் தோண்டப்பட்டுள்ளன. அதற்கு அவர்கள் கூறுவதாவது, "அந்தப் பள்ளியை கட்டுவதற்கு முன்னர் அங்கு யூதப் பள்ளியொன்று இருந்தது. அதை தோண்டுவதற்காகத் தான நாம் இவ்வாறு செய்கின்றோம்" என்கின்றனர். அங்கு பள்ளி இருந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

தலதா மாளிகைக்கு அடியில் இஸ்லாம் பள்ளியொன்று இருக்கிறது, அல்லது கத்தோலிக்க பள்ளியொன்று இருக்கிறது, அப்படியும் இல்லாவிட்டால் சூரிய தேவனை வணங்கிய காலத்தில் ஏதாவது இருக்கிறதென யாராவது கூறினால், அவ்வாறு கூறி அவ்விடத்தை தோண்ட ஆரம்பித்தால், இந்நாட்டு பௌத்தர்களின் இதயம் எப்படிப் படபடக்கும்? இஸ்லாம் பள்ளி இருப்பதாக கூறி மடு மாதாவின தேவலாயத்தை தோண்டினால் அது கத்தோலிக்கர்களுக்கு எப்படி இருக்கும்?

விகாரை ஒன்று இருப்பதாக கூறி நல்லூர் கோயிலுக்கு அடியில் தோண்ட ஆரம்பித்தால் எப்படியிருக்கும்? ஆம், அதோ அந்த மாதிரியான வேலையைத் தான் இங்கு செய்யப்படுகிறது.



**இஸ்ரவேல் அரசாங்கம் அந்த பள்ளிக்கு அடியில் சுரங்கமொன்றை தோண்டுகிறது. இப்போது நூறுக்கணக்கான சுரங்கங்கள் தோண்டப்பட்டுள்ளன. அதற்கு அவர்கள் கூறுவதாவது, "அந்தப் பள்ளியை கட்டுவதற்கு முன்னர் அங்கு யூதப் பள்ளியொன்று இருந்தது. அதை தோண்டுவதற்காகத் தான நாம் இவ்வாறு செய்கின்றோம்" என்கின்றனர். அங்கு பள்ளி இருந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.**

அதனால் உலகத்தில் வாழும் நாகரீகமுள்ள அனைவரும் இதைச் செய்ய வேண்டாமென கூறுகின்றனர். இலங்கை அரசாங்கமும் பல ஆண்டுகளாக இதை வேண்டாமென கூறியே வந்ததுள்ளது. ஆனால், கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கை இது தொடர்பில் யுனெஸ்கோ அமைப்பின் பிரேரணையின் போது வாக்களிப்பதை தவிர்த்தது. அதன் பின்னர் அது பாரிய இராஜதந்திர பிணக்காக மாறியது.

இலங்கையிலிருக்கும் முஸ்லிம் நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் 18 தூதுவர்கள் சென்று ஜனாதிபதியை சந்தித்தனர். சந்தித்து அவரிடம், "இதை செயய் வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்கள்" ஏனென்றால் இலங்கை. மத்திய கிழக்கு நாடுகளுடன் நீண்ட நாள் நட்புறவு இருப்பதுடன் அவர்கள் எமக்கு கஷ்டமான ஒவ்வொரு காலத்திலும் வாக்களித்திருக்கிறார்கள்.

ஆனால் மீண்டும் ஒருமுறை மே மாதம் மூன்றாம் திகதியும் வாக்களிப்பதை தவிர்த்திருக்கிறது. இப்போது பாலஸ்தீனத்தீனத்திற்கு எதிராக உலகத்தில் வாக்களிப்பது யார்? பாலஸ்தீனத்திற்கு எதிராக வாக்களிக்காவிட்டால், இஸ்ரவேலுக்கு ஆதரவாக வாக்களிப்பது அமெரிக்காவும், இஸ்ரவவேல் மட்டுமேயாகும். நாங்கள் உலகத்தோடு ஒன்றாகச் செல்கிறோம் என்றுதான் இப்போது இந்த அரசாங்கம் கூறி வருகிறது. உலகத்தோடு செல்வதாக நீங்கள் கூறினாலும் பாலஸ்தீனப் பிரச்சினையில் நீங்கள் உலகத்தோடு இல்லை. நீங்கள் இரண்டு நாடுகளுடன் மட்டுமே இருக்கிறிகள். இஸ்ரவேலுக்காக இரண்டு நாடுகள் மட்டுமே வாக்களிக்கின்றன.

நான் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக கூறியதும், இப்போது கூறுவதும் ஒரே தர்க்கமாகும். அமெரிக்காவுக்கு அடிபணிந்து, அமெரிக்காவின் கயிற்றைச் சாப்பிட்டு சாப்பிடும் பருப்புதான் இது. நமது நீண்ட நாள் நண்பர்கள் யார்? தீர்மானகரமான கட்டங்களில் ஒருபோதும் அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. அதுவே உண்மை. இவர்கள் அமெரிக்காவில் கல்விக் கற்றிருக்கலாம். ஆனால் இந்த நிலமையைப் புரிந்துக்கொள்ள வேண்டும். இலங்கையைப் போன்று அமெரிக்க பிராசாவுரிமையை வைத்திருந்த முன்னய அரசாங்கத்தில் இருண்டு பெரும் புள்ளிகள் இருந்தார்கள். முன்னாள் ஜனாதிபதியின் இரண்டு சகோதார்களும் அமெரிக்க பிரசையாக இருந்தனர். அதனால் அமெரிக்கா எமக்கு உதவியதா?

நமது நாட்டில் இராஜதந்திர உடமையென்பது 70 வருடங்களாக இந்நாடு சுதந்திர, தன்னாதிக்கமுடைய அரசாக, அணிசேரா நாடாக உலகத்தில் வென்றிருக்கும் கௌரவமாகும். நமது நாட்டிற்கு ஆதரவாக உலகத்தில் 100- 150 நாடுகள் இருக்கிறது. அதற்குத் தான் இப்போது வேட்டுவைக்கப்படுகிறது. அதை தான இப்போது அழித்தொழிக்கப்படுகிறது. நீங்கள் பாலஸ்தீனத்தை எதிர்த்து மத்திய கிழக்கு நாடுகளில் எமக்கு ஆதரவாக வாக்குகளை பெற முடியுமென நினைகிறீர்களா? சதாம் ஹுசேனை தூக்கிலுடும்போது அவர் கூறியதென்ன? ஈராக் வாழ்க! என கூறினாரா? இல்லை, அவர் பாலஸ்தீனம் வாழ்க! என்றே கூறினார். என்னைவிட இங்கிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை. தெரிந்துக்கொள்ள வேண்டும். அதனால் நாங்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் ஏகாதிபத்தியச் சார்பு, அமெரிக்கச் சார்பை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு வாக்கைக் கூட வென்றெடுக்காமல் எமது நீண்ட நான் மத்திய கிழக்கு நண்பர்களை இழக்க வேண்டாமென்றே நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். அப்படிச் செய்வதற்கு உங்களுக்கு உரிமையும் கிடையாது. அது மாத்திரமல்ல இது நியாயமான பிரச்சினை, 100 அடி ஆழத்திலுள்ள சுரங்கத்தில் இருந்தேனும் சரியான கொள்கையை பாதுகாக்க வேண்டும்.

எவருக்கும் ஆதரவில்லையெனக் கூறுவது விடையாகாது. அதாவது நமக்கு எந்தக் கொள்கையும் கிடையாது என்பதாகும். சரியானவற்றை சரியென்று கூறுவதற்கு முதுகெலும்பு இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெதமுலனவின் கனவுகளும் நாட்டின் அரசியல் யதார்த்தமும்



2005 முதல் 2015 ஜனவரி வரையிலான காலப்பகுதியில் இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவி வகித்த மகிந்த ராஜபக்ஸ 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றதன் பின்னர் அடுத்த பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு வந்ததன் மூலம் அவர் எவ்வளவு பதவிப் பேராசை கொண்டவர் என்பதை வெளிப்படுத்துகிறது. அன்றுமுதல் இன்று வரையிலான காலத்தில் அவர் "மீண்டும் அதிகாரத்தை கைபற்றுவதற்கான கனவு காண்பதுடன், தம்மைச் சுற்றியிருக்கும் கள்வர் கூட்டத்தையும் கண்மூடித்தனமான ஆதரவாளர் கூட்டத்தையும் அக் கனவில் சஞ்சரிக்க விட்டுள்ளார்". "அடுத்த ஆண்டில் ஆட்சியை கவிழ்ப்போம்" "இன்னும் இரண்டே பௌர்மிகளில் ஆட்சியைக் கவிழ்ப்போம் ஆகிய நிறைவேறாத ஆசைகளை ஊட்டி "ஆட்டிலிருந்து எதுவோ கிடைக்குமெனப் பார்த்துக்கொண்டிருந்த நரியின் கதையைப் போன்று" ஆட்சி வருமென பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அதிகாரப் பேராசையில் மூழ்கிப்போயிருக்கும் ராஜபக்ஸ ாக்களுக்கும், மகிந்தவின் தயவில் தங்கியிருப்பதைத் தவிர வேறு வழியற்ற அரசியல் அனாதைகளும், கள்வர் கூட்டமும் நிலபிரபுத்துவ எண்ணங்களுடனான தர்க்கரீதி அற்ற மஹிந்தவாதிகளும் இந்தக் கனவில் மிதக்கின்றனர். ஆகவே, தற்போதைய அரசாங்கம் எதிர்கொண்டுள்ள நெருக்கடியும் அராஜகப் போக்கும் மேற்கண்ட கனவினைக் காண்பதற்கு ராஜபக்ஸாக்களுக்கு அரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

தற்போதைய ரணில் மைத்திரி கூட்டு அரசாங்கம் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதையும், அரசாங்கம் பலவீனமானதென்பதையும், அதன் காரணமாக சமூகத்தில் வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதும் உண்மையே. அதனால் அரசாங்கம் சீக்கிரம் விழுந்துவிடுமென நாட்டில் கருத்து நிலவுகிறது. ஆனால் அரசாங்கத்தை கொண்டு செல்வோர் நெருக்கடியின் மத்தியிலும் அரசாங்கத்தை கொண்டு செல்லும் நடவடிக்கைகயை எடுத்து வருகின்றனர். அரசாங்கம் நெருக்கடியில் அமிழ்வதற்கு பல காரணங்கள் உள்ளன. ஒரு புறத்தில் அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடியில், அதாவது நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அதனால் நிதிப்பற்றாக்குறை அடைந்து செயற்திட்டங்களை முன்னெடுப்பதில் முடக்க நிலை தோன்றியுள்ளது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு மனநிலை தோன்றியுள்ளது.

மறுபுறத்தில் நாட்டில் தோன்றியுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நிலை காரணமாகவும் அரச பலத்திற்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது. விசேடமாக சயிட்டம் போராட்டம், விவசாயிகளின் போராட்டம், துறைமுகத்தை விற்பதற்கு எதிரான போராட்டம், திருமலை எண்ணெய்த் தாங்கிகளை விற்பதற்கு எதிரான போராட்டம் போன்ற போராட்டங்களால் அவற்றிக்கு முகம் கொடுக்க முடியாது அரசாங்கம் நலிவடைந்திருக்கிறது. திருமலை எண்ணெய்த் தாங்கிகளை விற்பதற்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கம் தொழிற்சங்கங்களிடம் மண்டியிட்டது. அவ்வகையான போராட்டங்களால் அரசாங்கத்தின் இருப்பு கேள்விகுறியாக்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று ஆளும் தரப்பினர்களுக்கிடையே காணப்படும் முரண்பாடும் அமைச்சர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் கழுத்தறுப்பின் காரணமாகவும் அரசாங்கத்தின் பலவீனம் வெளிப்படுகிறது. புதிய அமைச்சரவை மாற்றமும் மைத்திரி அணிக்கும் ரணில் தலைமையிலான ஐ.தே. கவுக்குமிடையிலான முரண்பாடுகளேயாகும். அவர்கள் அரசாங்கத்தின் இருப்பை தக்கவைப்பதற்காக தமது அணியைத் திருப்திப் படுத்துவதற்கான முயற்சியே புதிய அமைச்சரவை மாற்றமாகும் ஆனால் இதில் ஒருவரை திருப்திப்படுத்தும்போது இன்னொருவர் வெறுப்படையும் நிலைமையின் காரணமாக அரசாங்கத்தின் உட்கட்சிப் பூசல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்த அனைத்து விடயங்களும், இந்நாட்டு

> அதிகாரப் பேராசையில் மூழ்கிப்போயிருக்கும் ராஜபக்ஸாக்களுக்கும், மகிந்தவின் தயவில் தங்கியிருப்பதை தவிர வேறு வழியற்ற அரசியல் அனாதைகளும், கள்வர் கூட்டமும் நிலபிரபுத்துவ எண்ணங்களுடனான தர்க்கரீதி அற்ற மஹிந்தவாதிகளும் இந்தக் கனவில் மிதக்கின்றனர்.

மக்கள் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த ஊழல் மோசடிகளை நிறுத்துதல், கள்வர்களுக்குத் தண்டனை அளித்தல் போன்ற விடயங்கள் நிறைவேறாததன் காரணமாகவும் அரசாங்கத்தில் ஊழல் மோசடி வீண்விரயம் அதிகரித்துள்ளதனாலும் அரசாங்கத்தை உருவாக்கிய சக்திகளே அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்துள்ளனர். அரசாங்கத்தைக் கொண்டு செல்லும் இந்த இரண்டு கட்சிகளான ஐ.தே.க மற்றும் ஸ்ரீ.ல.சு.க மைத்திரி அணியால் மே தினத்தை வெற்றிகரமாக நடத்த முடியாமையும் அதில் வெளிப்படுகிறது.

அரசாங்கம் முகம்கொடுத்திருக்கும் இந்த நெருக்கடியான நிலைமையின் கீழ் அரசாங்கத்தைத் துரிதமாகத் தோற்கடித்து மகிந்த ஆட்சியை உருவாக்கும் கனவு மேம்பட்டு வருகிறது. ஆனால் உண்மையான அரசியல் யதார்த்தினுள் மகிந்தவுக்கு மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாத நிலையே காணப்படுகிறது. மெதமுலனை கும்பலும் மகிந்தவைச் சுற்றியிருக்கு கயவர்களும் காணாத அல்லது கண்டும் காணாததுபோலிருக்கும் யதார்த்தம் அதுவாகும். மகிந்தவை சுற்றியிருப்போர் (மேதினத்தில் கண்டதுபோல்) தெளிவில்லாத, எதுவிதமான பண்பாடுள்ளவர் அல்ல. அவர்கள் கட்சியுடனோ கட்சியை வெற்றியீட்டுவதற்கு அல்ல மகிந்தவை வெல்லவைப்பதற்காகும். அதில் மகிந்தவே முக்கிய கருப்பொருளாகும். ஆனால் நமது நாட்டின் 19வது அரசிய் யாப்பு திருதத்திற்கு அமைவாகவும் அரசியலில் சக்திகள் திரண்டிருக்கின்ற விதத்தின் படியும் மகிந்த ஆட்சிக்கு வருவதற்கான அறிகுறி தென்படவில்லை. என்பதே உண்மை.

நாட்டின் ஆட்சியதிகாரத்தை மாற்றுகின்ற சந்தர்ப்பமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வருமானால் (நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் அரசாங்கத்தின் வாக்குறுதியின் படி அவ்வாறான ஒன்றுக்கு சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும்) 19வது திருதத்திற்கமைய மகிந்தவுக்கு போட்டியிட முடியாது. அதன்போது மகிந்த ஆட்சிக்கு வரப்போவதில்லை. மகிந்த அணியில் வேறு ஒருவருக்கோ மெதமுலனவில் வேறு ஒருவருக்கோ மகிந்தவால் எடுக்கக்கூடிய வாக்குகளை எடுக்கவும் முடியாது. அதனால் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமானால் அதில் மகிந்த போட்டியிட முடியாது, அதேவேளை அவரது அணியில் வேறு ஒருவரால் வெல்லவும் முடியாது. தமக்கு கிடைக்காத அதிகாரம் தமது பிள்ளைகளுக்கேயின்றி தமது அணியிலேனும், வேறு ஒருவருக்கு கிடைப்பதை மகிந்த விரும்பப் போவதில்லை. அதனால்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் மக்களி

## பாராளுமன்ற உறுப்பினர் தே

**செஞ்சக்தி:**
உலக இளைஞர் மற்றும் மாணவர் விழாவில் ஏற்பாட்டுக்குழு கூட்டத்திற்காக அண்மையில் நீங்கள் ரஷ்யா சென்றிருந்தீர்களா? இந்த விஜயத்தின் அனுபவங்கள் எப்படி?

**தோழர் பிமல் ரத்நாயக்க:**
விசேடமாக எடுத்துக்கொண்டால் உலக இளைஞர் மற்றும் மாணவர் விழா இம்முறை ரஷ்யாவில் இடம்பெறவுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் சோஷ லிச இளைஞர் சங்கமும் சோஷலிச மாணவர் சங்கமும் அதில் பிரதான பொறுப்பு வகிப்பதால் அதனை தயார்படுத்தும் கூட்டத்தில் நான் கலந்துக்கொண்டேன். ஆனால் இது விசேடமாக ரஷ்யாவில் இடம்பெறும் உலக இளைஞர் விழா தொடர்பில் செஞ்சக்தி வாசகர்களுக்கு எதிர்வரும் நாட்களில் கூடுதலான தகவல்களைத் தெரிந்துக் கொள்ள முடியும். அதனால் நான் இம்முறை எனது விஜயத்தின்போது எனக்குக் கிடைத்த விசேட சந்தர்ப்பங்களைப் பற்றி பேசுவதற்கு விரும்புகிறேன். மே 9ம் திகதி, செஞ்சதுக்கமென அழைக்கப்படும் கிரெம்லியின் முன்னால் நடைபெற்ற, 1945 மே 09ம் திகதி சோவியத் செம்படைகள் ஏகாதிபத்திய நாசி ஹிட்லரை தோற்கடித்த தினத்தை நினைவுக்கூறுமுகமாக இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்கு எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. விசேடமாக 1939ல் ஆரம்பமான இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி, உட்பட்ட பாசிச, நாசிசவாத சக்திகளை சோவியட் செம்படைகளால் ஆக்ரோசமாகத் தோற்கடிக்கப்பட்டது. அது சோவியட் கமியூஸ்ட் கட்சியின் தலைமையில் நடைபெற்ற மாபெரும் தேசபக்தி யுத்தத்தினாலாகும். இந்த யுத்தத்தில் ஜேர்மன் இராணுவம் முழுமையாக தோற்கடிக்கப்பட்டது மட்டுமல்லாமல் இறுதியாக ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டதோடு ஜேர்மன் இரண்டாவது உலக யுத்தத்தைக் கைவிட்டது.
இதில் உள்ள விசேட அம்சம் என்னவெனில், சோவியத் யூனியன் இந்த மிகப் பிரமாண்டமான வெற்றியை 27 மில்லியன் மக்களின் உயிர்த் தியாகத்தின் மூலம் பெற்றுக்கொண்டது. இரண்டாம் உலக யுத்தத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 மில்லியன் ஆகும். அதில் 27 மில்லியன் மக்கள் சோவியத் பிரஜைகள் ஆவர். அதனால் அன்று முதல் இன்றுவரையில் இது ஒரு பிரமாண்டமான தியாகமாகும். எல்லாக் குடும்பங்களிலும் ஒருவர், இன்றும் ரஷியாவில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திலும் அல்லது தங்கள் உறவினர்களில் ஒருவர் இந்த மாபெரும் யுத்தத்தில் உயிர்தியாகம் செய்துள்ளனர். அதனால் 1945 முதல் அன்றைய சோவியடத் தேசத்திலும் இன்று ரஷி யாவிலும் இந்த நாஸிசவாதிகளை தோற்கடித்து சோவியட் செம்படைகள் மூலமாக, கமியூனிட் இராணுவத்தால் பெற்றுக்கொண்ட, சோஷலிச அரசின் மூலமாக பெற்றுக்கொண்ட மிக பிரமாண்டமான வெற்றியை நினைவுக்கூறப்படுகிறது. இன்றைய விசேட அம்சம் என்னவெனில் ரஷ்யா இன்று முதலாளித்துவ நாடாக இருப்பதாகும். ஆனால் ரஷ்யாவில் முதலாளித்துவ புரட்சிக்கும் செம்படைகள் செய்த மிகப்பெரிய பணியை, சோவியத் மக்கள் செய்த தியாகம் அவர்களால் வரலாற்றில் மறைக்க முடியாது. அவர்கள் பல்வேறு விதமான தந்திரோபாயங்களை இப்போதும் பிரயோகித்து வருகின்றனர். ஆனால் இன்றும் அந்த நினைவஞ்சலி நிகழ்வுகள் பல சந்தர்ப்பங்களாக இடம்பெறுகிறது. அதில் ஒன்று ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெறும் உத்தியோகப்பூர்வ விழா. விசேட அழைப்பிற்கேற்ப நாங்களும் அதில் கலந்து கொண்டோம். அதில் இராணுவ அணிவகுப்பும் கண்காட்சியும் இடம்பெற்றது. அதன் பின்னர் தற்போதய ரஷ்ய கமியூனிட் கட்சியால் நடத்தப்பட்ட அவர்களின் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் நாம் கலந்து கொண்டோம்.
ஆனால் குறிப்பிட்டு கூறவேண்டிய விசேட விடயம் என்னவெனில் ரஷ்ய மக்களால் அமரத்துவமான ரெஜிமெண்ட் எனும் பெயரின் இயக்கமானது உருவாக்கப்பட்டிருக்கிறது. "இமோடல் ரெஜிமெண்ட்" இது கீழ் மட்டத்திலிருந்து உருவான இயக்கமாகும். இன்று அது பல இலட்சம் மக்கள் கலந்து கொள்ளும் பேரியக்கமாகும். மக்கள் அரசியல் கட்சி மத பேதமின்றி இந்த மாபெரும் தேசபக்த யுத்தத்தின் இறந்த போராடிய பாட்டன், அப்பன், கொல்லுப்பாட்டி ஆகியோரை நினைவுக்கூர்ந்து அவர்களின் புகைப்படங்களை ஏந்தியவண்ணம் முழு ரஷ்யாவிலும் வாழும் அனைவரும் ரஷ்யர்கள் வாழும் உலகின் ஏனைய நாடுகளிலும் நகரங்களிலும் அமெரிக்கா நியோர்க் நகரத்தில், அவுஸ்ரேலியா மெல்பன் நகரத்தில், இங்கிலாந்து, லண்டன் நகரத்தில் பிரான்ஸில், கிரேக்க, எதென்ஸ் நகரில் இந்த இடங்கள் அனைத்திலும் மிக பிரமாண்டமான ஊர்வலங்கள் நடாத்தப்படுகிறது. தாங்களினதும் எதிர்கால மனித குலத்தினதும் எதிர்காலத்தில் பாதுகாப்பதற்கு இந்த மிகப்பெரிய தேசபக்த போராட்டத்தில் உயிர்நீத்த தமது உறவினர்களை நினைவுக்கூறுவதற்காக வீதிக்கு இறங்கியுள்ளனர். மொஸ்கோ நகரத்தில் இடம்பெற்ற கூட்டத்திற்கு 8 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். அதன் விசேட அம்சம் என்னவெனில் தற்போதய முதலாளித்துவ தலைவர்கள் அந்த சோசலிசத்தின் வெற்றியை போல்செவிக்குகளின் தியாகத்தை மறைக்க முயன்றாலும் அதை முற்றாக செய்வதற்கு அவர்களால் முடியாதுபோயுள்ளது. அது ஏனென்றால், மக்கள் செல்லும் ஊர்வலங்களில் அவர்களும் அடித்துச் செல்லப்படுகிறது. அவர்களின் பாட்டனுக்கு, தாங்களது தந்தைக்கு செம்படைகளிடமிருந்து கிடைத்த பதக்கங்களையும் நினைவுச்சின்னங்களையும் சுமந்து செல்கின்றன. அந்த நினைவுச்சின்னம் உருவங்களில் தோழர் லெனின் படமும் சுத்தியலும் அரிவாளுமே காணப்படுகிறது. இன்றும் கூட ரஷ்ய இராணுவப்படைகளால் பாவிக்கப்படும் பிரதான இலட்சனை சுத்தியலும் அரிவாளுமாகும். ஆனால் அதன் மூலம் தற்போதய ரஷ்யா, சோஷலிச ரஷ்யா என கருத முடியாது. ஆனால் அதிலிருந்து புலம்படுவது, அப்போது போராடியது செம்படைகள் என்பதாகும். அதாவது கம்யூனிச இராணுவமாகும். அதை எவராலும் மூடி மறைக்கமுடியாது. தாங்களது நாட்டின் அபிமானத்தை பெற்றுக்கொடுத்த அந்த கமியூனிஸ் கட்சியைப் பற்றி பல இலட்சக்கணக்கான ரஷ்ய மக்கள் பெருமையுடன் பேசி வருகின்றனர். அதை அவர்கள் புதிய தலைமுறையினருக்கும் பெற்றுக் கொடுக்கின்றனர். நாம் அதை கண்கூடாப் பார்த்தோம். இது ரஷ்யாவின் எதிர்கால சோஷ லிச இயக்கத்திற்கு பெரும் உந்து சக்தியாக அமைகிறது. இது தற்போது முதலாளித்துவ ரஷ்யா வீழ்ந்து கிடக்கின்ற இடத்தையும், முதலாளித்துவ ரஷ்யாவுக்கு இன்று ஏற்பட்டிருக்கிற நிலைமைகளும் அன்றைய சோவியத் யூனியன் எவ்வளவு அபிமானமிருந்த அரசாக இருந்ததென்பதை தற்போதய இளம் ரசிகர்களுக்கு நல்லதோர் பாடத்தைக் கற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பமாகவே இதை நாம் கருதுகின்றோம். அதேபோல் நாங்கள் ரஷ்யர்களிடம் இந்த தேசப்பற்று உணர்வு இருக்கும் வரையில் அமெரிக்காவசம் என்ன அணு ஆயுதங்கள், ஏவுகணைகள் இருந்தாலும் அதன் தலைமைத்துவத்தால் காட்டிக்கொடுக்காதிருந்ததால் தற்போதைய ரஷ்யாவை அடிபணியவைக்க முடியாது என்றே நாம் கருதுகின்றோம்.

**செஞ்சக்தி:**
இம்முறை மக்கள் விடுதலை முன்னணியின் மே தினக்கூட்டம் பல்வேறு அங்கங்கள் அடங்கியிருந்ததை கானமுடிகிறது. பிரமாண்டமாக மக்கள் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில்



முதற்தடவையாக மே தினத்தை நடத்திருந்ததையும் சர்வதேச பிரதிநிதிகளின் பங்களிப்பையும் விசேடமாக குறிப்பிடமுடியும். இது தொடர்பாக உங்களின் கருத்து என்ன?


> அதிலிருக்கும் விசேடம்சம் என்னவெனில் யாழ்ப்பாணத்திலிருக்கும் புத்திஜீவிகள் குறிப்பிட்டதாவது 1960 களில் சண்முகதாசன் தலைமையில் இடதுசாரிகள் சோந்து மேதினத்தை நடத்தியிருக்கின்றனர். அதற்கு 40 வருடங்களுக்குப் பின்னரே இம்முறை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் ஏனைய அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு எம்மால் யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்தையும் மேதினக் கூட்டத்தையும் நடத்துவதற்கு. முடியுமாயிருந்தது.

**தோழர் பிமல் ரத்நாயக்க:**
இம்முறை மே தினமானது கட்சி வரலாற்றில் இடம்பெற்ற மிக பிரமாண்டமான மே தினம் என்பதை கருதவேண்டும். விசேடமாக எடுத்துக்கொண்டால் மிகபெரிய வெற்றிகளை குவித்துக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளிடமே உள்ளது

## தோழர் பிமல் ரத்நாயக்க



க்கும்
1960
யில்
தை
40
றை
ன்
ளையும்

தையும்
தற்கு.

ஆனால் மேதினத்தை எடுத்துக்கொண்டால் எமக்கு மேதினத்தில் காணக்கூடியதாக இருந்தவை தான் மக்கள் விடுதலை முன்னணியைச் சூழ பொது மக்களை அணிதிரட்ட முடியுமென்ற நம்பிக்கையும் நாம் முன்னெடுத்துச் செல்கின்ற வேலைத்திட்டமும் சரியென்பதாகும். அது தொடர்பிலான சரியான விடை இம்முறை மேதினத்தில் கிடைத்தது. இம்முறை மேதினத்தில் கலந்துகொண்ட பெரும்திரளான மக்களில் விசேடமாக புதிய சக்திகளை காண முடியுமாயிருந்தது. கிராமங்களில் ஒருபோதும் மேதினத்தில் கலந்துக் கொள்ளாதவர்கள் இம்முறை காணக்கூடியதாய் இருந்தது. அதனால் கடந்த முறை மேதினத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை 40வீதம் அதிகரித்திருக்கிறது. இது பெரிய வளர்ச்சியாகும். இந்நாட்டு பொது மக்களை மக்கள் விடுதலை முன்னணியைச் சூழ அணிதிரட்டுவதை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் வெற்றியளித்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இரண்டாவது விடயம் என்னவெனில் இம்முறை மேதினத்தில் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்துகொண்டமையாகும். இம்முறை மேதினத்தில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் இன்று உலகத்தில் இருக்கின்ற பிரதான சோஷலிச நாடாக கருதப்படுகின்ற கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தோழர் ஒருவரும் கலந்துக்கொண்டார். சரித்திரத்தில் முதல் தடவையாகத்தான் கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர் எமது மேதினத்தில் கலந்துக்கொண்டுள்ளார். கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் ஒருவர், மற்றும் ஐரோப்பா பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும் கலந்துக்கொண்டார். இன்று கிரேக்கத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பாரத்தைச் சுமக்கின்ற பிரதானமான முன்னோடி என்பதை குறிப்பிட்டாக வேண்டும். உலகத்தில் தற்போது செயற்பட்டுவரும் சர்வதேச கம்யூனிஸவாத தொழிற்சங்கங்கள், அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், கட்சி அமைப்பு, இந்த பெரும்பான்மையான தோழர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சி செயற்பட்டு வருகிறது. அது மிகவும் அமைதியான முறையில் உருக்கு நிறைந்த கட்டுப்பாடு நிறைந்த கம்யூனிஸ்ட் கட்சியாகும். அதன் அங்கத்தவர்கள் இம்முறை எமது மேதினத்தில் கலந்துக் கொண்டதன் மூலம் மக்கள் விடுதலை முன்னணியை பற்றிய போதிய புரிதல் ஏற்பட்டுள்ளமை மிக முக்கியான விடயமாகக் கருதுகின்றோம். அதற்குப் புறம்பாக இங்கிலாந்தின் மார்க்ஸ் லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சியிலும் இந்தியாவில் எமது சகோதர கட்சியாகக் கருதப்படுகின்ற போர்வார்ட் ப்ளொக் கட்சியின் தலைவர்களும் இதில் கலந்துக்கொண்டார்கள்.

அதற்குப் புறம்பான விசேடக் காரணம் என்னவெனில், இம்முறை மக்கள் விடுதலை முன்னணியின் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தில் மேதினமொன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மேதினமானது யாழ்ப்பாணத்திலிருக்கும் தொழிற்சங்கங்கள், மீனவர் அமைப்புகள், மாணவர் அமைப்பு உள்ளிட்ட புத்திஜீவிகள் அடங்கிய அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டு மேதினமாகவே இடம்பெற்றது. அதிலிருக்கும் விசேடம்சம் என்னவெனில் யாழ்ப்பாணத்திலிருக்கும் புத்திஜீவிகள் குறிப்பிட்டதாவது 1960 களில் சண்முகதாசன் தலைமையில் இடதுசாரிகள் சோந்து மேதினத்தை நடத்தியிருக்கின்றனர். அதற்கு 40 வருடங்களுக்குப் பின்னரே இம்முறை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் ஏனைய அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு [illegible] யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்தையும் மேதினக் கூட்டத்தையும் நடத்துவதற்கு முடியுமாயிருந்தது. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்துக்கொண்ட முதலாவது மேதினம் இதுவென யாழ்ப்பாண கல்விமான்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்றாவது காரணி என்னவெனில், வடபகுதி மக்களின் பங்களிப்புடன் மட்டும் (யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இரண்டு மேதினத்தை நடத்துவது அவ்வளவு இலகுவான விடயமல்ல) மேதினத்தை நடத்தினோம். வடபகுதியில் இடம்பெற்ற மிகப்பெரிய மேதின ஊர்வலமும் மேதினக் கூட்டமும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் இடம்பெற்ற மேதினம் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். இந்த மேதினத்தில் உள்ள அடுத்த சரித்திரம் வாய்ந்த விடயம், வடபகுதி மக்கள் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாட்டிற்குப் பதிலாக அவர்கள் விவசாயிகள், உழைக்கும் மக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இருப்பது ஒரே பிரச்சினை என்ற வகையில் ஒரே மேடைக்கு கொண்டு வருவதே எமது எதிர்பார்பாக இருந்தது. அதில் நாம் வெற்றிக் கண்டுள்ளோம். யாழ்ப்பாண மேதின மேடை மிகவும் விரிவான மேடை.யாக அமைந்திருந்தது விவசாயிகள், மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர்கள், கல்விமான்கள், யாழ்ப்பாணத்தில் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் இவ்விதமாக மிகப் பரந்தளவிலாள மக்கள் தலைவர்களை எம்மால் இணைத்துக்கொள்ள முடியுமாயிருந்தது.

வடபகுதியில் யுத்ததால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பது உண்மையே ஆனால் இன்று அவர்கள் இந்த முதலாளித்துவ முறையின் கீழ் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த முதலாளித்துவ முறையின் ஒடுக்குமுறை பாரதூரமானதாகும். அதனால் எங்களின் தேவை என்னவெனில் சதாகாலமும் யுத்தப் பிரச்சினைகளை மட்டும் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக வடபகுதியில் உழைக்கும் மக்கள் என்ற வகையில் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கும் ஒடுக்குமுறைக்கும் வடபகுதியின் குரலை நாட்டிற்கு தெளிவுப்படுத்துவற்காகும். அது வெற்றியளித்துள்ளதென்றே நாங்கள் நம்புகிறோம். எதிர்வரும் காலங்களில் இதைவிட வெற்றிகரமான மேதினத்தை நடத்த முடியுமென்ற திடமான நம்பிக்கை எமக்கு வந்திருக்கிறது.

**[illegible]** அரசாங்கம் முகம்கொடுத்திருக்கும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியுடன் இலங்கை அரசியலில் மீண்டும் சூடேறியிருக்கிறது. பொதுவாக முதலாளித்துவ அரசியல் தமது இயலாமையை வெளிப்படுத்தும் அதேநேரம் முன்னர் இருந்த மோசடிமிக்க ஆட்சியாளர்கள் மீண்டுமொரு முறை மக்களை ஏமாற்ற முயற்சித்து வருகின்றனர். இந்த அரசியல் நிலைமையை மக்கள் விடுதலை முன்னணி எவ்வாறு புரிந்துக்கொள்கிறது. சவாலை வென்றெடுப்பதற்கான தயாரிப்புகள் எவ்வாறு?

**தோழர் பிமல் ரத்நாயக்க:** முதலாளித்துவ அரசியலில் இருக்கும் தன்மையே அது. மிகவும் வங்கரோத்தடைந்த மிகவும் தோல்விக்கண்ட ஒன்றென்பதால் நாட்டை ஒரு அங்குலத்திலேனும் முன்னோக்கி கொன்டுச் செல்ல முடியாமை, உங்களுக்குத் தெரியும் ராஜபக்ஷ ஆட்சியை இந்நாட்டு மக்கள் வீழ்த்தியது இலகுவான காரியமல்ல. அவர்களால் விரட்டப்பட்டு உருவாக்கிய அரசாங்கத்திற்கு இந்த ராஜபக்ஷ நாசமாக்கிய நாட்டை ஒரு அடியேனும் முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியாதுள்ளது. அதைதான் தோழர் லெனின் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார். முதலாளித்துவ முறைக்கு ஒரு அங்குலத்திலேனும் நல்லதை செய்ய முடியாதென்பதாகும். இதைத் தான் நாம் எல்லாத் துறைகளிலும் காண்கிறோம். தற்போதைய ஆட்சியாளர்கள் பிரச்சினையை மேலும் சாக்கடையில் தள்ளுவதைத் தவிர வேறு ஒன்றும் இவர்களால் செய்ய முடியாது. அதனால் எப்போதும் அந்த பழைய கள்வர்கள், கொலைகாரர்கள், நாட்டைக் காட்டிக்கொடுத்த நபர்கள், மீண்டும் புத்தாடை அணிந்துக்கொண்டு வருவது இலங்கைக்கு மாத்திரம் உரித்தான விடயமல்ல. உலகம் முழுவதிலும் முதலாளித்துவத்தை தோற்கடிக்க முடியாதுபோன எல்லா நாடுகளிலும் மக்கள் முகம் கொடுத்திருக்கும் கவலைக்கிடமான நிலை இதுவாகும். மறுபுறத்தில் மக்களுக்கு இருக்கும் சவாலாகும். கள்வர்களை விரட்டுவதற்கு மக்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். கள்வர்களுக்குப் பதிலாக முற்போக்கு, இடதுசாரித்துவ அரசியல் தலைமையை கொண்டு வருவதில் உலகத்தில் பெரும்பான்மையான மக்கள் தோல்வி கண்டுள்ளார்கள்.

தற்போது ராஜபக்ஷாவின் மேதினத்திற்கு பெரும்திரளான மக்கள் கலந்துக்கொண்டார்கள் என்ற விடயம் பேசபடு பொருளாக மாறியுள்ளது. நாங்களும் கண்டோம் அரசாங்கத்தை ஆளுகின்ற கட்சியை விட அதிக மக்கள் ராஜபக்ஷா

தொடர்ச்சி 11ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தில் உண்மையான போராட்டம்

நாம் வாழும் இலங்கை மண்ணில் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராகப் பல வகையான போராட்டங்கள் உதயமாகியுள்ளது. நாட்டின் உழைக்கும் மக்களைப் போன்றே இளைஞர்கள், மாணவர்கள், அனைவரும் மாற்றமின்றி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்திற்குள் பிரவேசித்துள்ளனர். தற்போதைய அரசாங்கத்திற்கு தொழில் துறையில் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் தொடர்கிறது. அதில் விசேடமான போராட்டமாக சயிட்டத்திற்கு எதிரான போராட்டத்தை குறிப்பிடலாம். தொழிலாளர்கள், மணவர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பலரும் இதனுடன் இணைந்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் முற்போக்குச் சகதிகளுக்கு கவனத்தில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. ஒருபுறத்தில் மீண்டும் தலைதூக்குவதற்கு எத்தனிக்கின்ற எந்தவொரு போராட்டத்திலும் தொங்குவதற்காகப் பார்த்துக்கொண்டிருக்கின்ற மகிந்த அணி இருப்பதை காண முடிகிறது. சயிட்டம் நிறுவனத்திற்கு நிதியுதவிகளையும் செய்து அதற்கு பட்டத்தை வழங்கும் தகமையை ஏற்படுத்திக் கொடுத்தது மகிந்தவின் ஆட்சியினளாகும். ஆனால் இன்று பதவி பேராசை காரணமாக மகிந்த கும்பல் சயிட்டம் எதிர்ப்புச் சுலோகத்தை உச்சரிக்கத் தொடங்கியுள்ளது. இவர்களின் இந்தப் போராட்டம் உண்மையான போராட்டமா அல்லது சயிட்டத்தைப் பாதுகாப்பதற்கான சதித்திட்டமா என்பதையிட்டுக் கவனமாக இருப்பது யாவரினதும் கடமையாகும். அதேபோன்று சயிட்டம் எதிர்ப்புப் போராட்டத்தில் அடிப்படைவாத தீவிர இடதுகள் எனக் கூறிக்கொண்டு இருக்கும் கும்பலும் அவர்களின் குறுகிய அரசியல் நோக்கத்திற்காகவும் அவர்களின் பொதுச் செயற்பாட்டிலுள்ள பலவீனத்தின் இயலாமையை மூடிமறைப்பதற்காகச் சயிட்டம் போராட்டத்தை பயன்படுத்துவதற்கு முயன்று வருகின்றனர்.

இதன்போது அரசாங்கத்தின் அதிகாரிகள் மக்களுக்கு மறைத்து சயிட்டம் பிரச்சினையைத் தீர்ப்பதாக போலியான தீர்வுகளை முன்வைத்து வருகிறது. சயிட்டம் உரிமையாளர் உள்ளிட்ட அதற்காகச் செயற்படுகின்றவர்களும், செயற்படுகின்ற கும்பலும் போதுமான பணத்தை செலவுசெய்து விலைக்கு வாங்கக் கூடிய அனைவரையும் விலைக்கு வாங்கி எப்படியாவது சயிட்டத்தைச் சட்டபூர்வமாக்குவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

இப்போதுள்ள நிலவரத்தின்படி சயிட்டம் போராட்டத்தை பொதுமக்களின் போராட்டத்துடன் இணைப்பதற்கு உண்மையிலேயே வெற்றியிட்டுவதற்காகப் போராடுவது போராட்டத்தில் இருக்கும் முற்போக்குவாதிகளுக்கு இருக்கின்ற சவாலாகும்.


உண்மையாக வர்க்க இயக்கத்தின் கடமைப் பொறுப்பு எதிரிகள், சந்தர்ப்பவாதிகள், குழுவாதிகள் போன்ற அற்பவாதிகளை அம்பலத்திற்கு கொண்டு வருவதென்பது போராட்டத்தை சரியான திசைக்கு கொண்டுச் செல்வதாக அமையும். அதன்போது வாக்க இயக்கம் பொதுப் போராட்டத்தில் இருந்துகொண்டு தீர்மானகரமான கட்டத்தில் போராட்டத்தை கையிலெடுத்து போலிப் போராட்டகார்களின் முகத்திரையை கிழித்தெறிவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் அரசியல் தேவையாகவுள்ளது.


இதில் புரட்சிகர இயக்கத்தின் முனன்ணி கடமைப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றவர்களும் நிறைவேற்ற வேண்டிய இளம் புரட்சிவாதிகளுக்கும் விசேடமான பணியொன்று உள்ளது. தோழர் லெனின் கூறியதுபோன்றே வரலாற்றில் போராட்டக்கார்களை விட மிகவும் நன்றாகத் தற்போதைய போராட்டக்கார்கள் போராடி வருகின்றனர். அதேபோன்று எதிர்காலப் போராட்டக்கார்கள் தற்கால போராட்டக்கார்களைவிட மிகவும் உறுதியாகவே போராடுவர். அவர்கள் வெற்றிபெறுவர். எதிர்காலத்துச் சொந்தக்கார்கள் இளைஞர்களாகும். அவர்கள் செல்லும் பாதை சரியானதாக இருக்க வேண்டும். அரசியல் குறிக்கோள் பற்றிய அறிவும் தேடலும் தேவைப்படுவது இவ்வாறான வேளையிலாகும். சம்பவங்களோ நடவடிக்கைகளோ அல்ல குறிக்கோளை அடையாளம் காண வேண்டும். சம்பவங்களும் நடவடிக்கைகளும் கண்ணோட்டத்தில் மட்டும் முற்போக்கானதாக இருப்பதினால் நடவடிக்கை முற்போக்கானதாக அமைந்து விடுவதில்லை. அவர்கள் உண்மையான குறிக்கோளை இனங்காண வேண்டும். அவ்வாறு புரிந்துகொண்டு, மாற்றங்களுடன் ஒன்றாகப் போராடக் கூடிய போராட்ட முன்னணியை நிர்மாணித்துக் கொள்வதற்கு ஏற்படுவதுடன் அதனுள் நேர்மையாகவும் சரியாகவும் போராடுவதால் மட்டுமே போராட்டத்தை வெல்ல முடியும்.

# உலக அமைதிக்கு இலங்கை தயார்

உலக ஜனறாயக இளைஞர் சம்மேளனம் (WFDY) என்பது உலகத்தில் மிகப் பிரம்மாண்டமான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக இளைஞர் அமைப்பாகும். இம்முறை அதன் ஆசிய பசுபிக் வலயத்தின உபதலைவர் பதவி மக்கள் விடுதலை முன்னணியின் கனிஷ்ட அமைப்புகளான சோஷலிச இளைஞர் சங்கம், சோஷலிச மாணவர் சங்கத்திற்கு கிடைத்திருக்கிறது. இலங்கையில் ஒரு அமைப்பு அதன் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும்.


எவ்வாறாயினும், WFDY மூலமாக உலகம் முழுவதிலும் விரிந்து கிடக்கும் இளைஞர் மற்றும் மாணவர்களை அணிதிரட்டி ஒவ்வொரு நான்கு வருடத்திற்கு ஒரு முறை உலக இளைஞர் மற்றும் மாணவர் விழாவினை (WFDY) நடத்தி வருகிறது. அதன் 19வது விழா இவ்வருடம் ஒக்டோபர் மாதத்தில் ரஷ்யாவில் சோச்சி நகரத்தில் நடத்தப்படவுள்ளது. அவ்விழாவின் 03வது சர்வதேச ஏற்பாட்டுக் குழு கடந்த 25,26,27 ஆகிய மூன்று நாட்கள் இலங்கையில் இடம்பெற்றது. இலங்கையில் சகல அரசியல் கட்சிகளும் ஒரே அமைப்பாக திரண்டு WFDY ஏற்பாட்டுக்குழு கூட்டம் இடம்பெறுவது இதுவே முதற் தடவையாகும். அதில் உலகத்தில் 50க்கும் அதிகமான நாடுகளின் 100க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டமை விஷேடம்சமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிரம்ப் அரசாங்கத்தால் நிவாரணத் துண்டிப்பு




ஐக்கிய அமெரிக்காவின் டிரம்ப் ஆட்சியின் முதலாவது வரவு-செலவு திட்டம் மே 23ம் திகதி வெளியிடப்பட்டது. அதற்கேற்ப எதிர்வரும் பத்து வருடங்களுக்கான அரசாங்கத்தின் செலவுகளை 3.6 ரில்லியன்களினால் துண்டிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதில் சுகாதாரக் காப்புறுதி திட்டங்கள், உணவு நிவாரணங்களட, மற்றும் ஊனமுற்றவர்களின் நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பாரியளவில் துண்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெள்ளை மாளிகையின் அதிகாரி மயிக் முள்வானி, இந்த வரவு-செலவு திட்டம் வரிச் செலுத்துவோருக்கு முன்னுரிமை வழங்கும் ஒன்றே அன்றி அரசாங்கத்தினால் நலன்புரிகளை எதிர்பார்ப்போருக்கு சலுகை வழங்கும் ஒன்றல்ல எனக் கூறியுள்ளார்.

இத்திட்டத்திற்கு ஏற்ப எதிர்காலத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மற்றும் ஊனமுற்ற அமெரிக்கர்களுக்கான சுகாதார காப்புறுதிக்காக ஒதுக்கபட்ட நிதியிலிருந்து 800பில்லியன் அமெரிக்க டொலர்கள் துண்டிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. 44மில்லியன் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் மேலதிக போஷாக்கு திட்டத்திலிருந்து 193 பில்லியன் அமெரிக்க டொலர் துண்டிக்கவுள்ளதாகவும், பாதுகாப்புத் துறைக்கு புறம்பான துறைகளிலிருந்து 54 பில்லியன் அ.டொ எடுத்து பாதுகாப்புத் துறைக்கு தரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# வெனிசூலாவில் இயல்பு நிலையை குழப்புவதற்கு அமெரிக்க நிதி



அமெரிக்காவில் 2017ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் வெனிசூலாவில் “ஜனநாயகத்தை உறுதிபடுத்துவதற்கென” 5.5மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டடிருப்பதாக அமெரிக்காவின் அரச திணைக்களம் தெரிவிக்கின்றது. இந்நிதி வெனிசூலாவின் சிவில் அமைப்புகளுக்கே வழங்கப்படுகின்றது.

இந்நிதியானது வெனிசுலாவில் நிகொலொஸ் மதுரோவின் ஆட்சியை கவிழ்ப்பதற்காகச் செயற்படும் அந்நாட்டின் எதிர்கட்சியனருக்கே ஒதுக்கப்படும். ஐக்கிய அமெரிக்காவுக்குச் சார்பான குழுக்கள் இச்சமயத்தில் வெனிசூலாவில் பொருட்களின் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, மக்களை வன்முறைகளுக்குள் தள்ளி வருகின்றனர். இவ்வருடத்தில் ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் 60ற்கும் மேற்பட்ட நபர்கள் உயிரிழந்துள்ளதோடு 1000ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பழைய பாதையிலேயே செல்லும் 'புதிய' பிரான்ஸ்




பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாம் சுற்று மே 07ம் திகதியுடன் முடிவடைந்தது, En Marche கட்சியின் வேட்பாளர் இம்மானுவேல் மெக்ரோனுக்கு வெற்றி கிடைத்தது. இரண்டாம் சுற்றில் மெக்ரோனுக்கு 65.82% வக்குகள் கிடைத்தது. அவரின் எதிர் போட்டியாளரான மெரின் பென் 34.18% சதவீதமான வாக்குகளை பெற்றார்.

இம்முறை பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல் பல விஷேட அம்சங்களை கொண்டிருந்த தேர்தலாகும். பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றப்போது 1958க்குப் பின்னர் உருவான பாரிய சமூக நெருக்கடியில் அமிழ்ந்துப் போயிருந்தது. பிரான்ஸ ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடியிலும், பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலாலும், வெளிநாட்டவர்களின் வருகையினாலும், அவதிப்பட்டுக் கொண்டிருந்த சந்தர் ப்பத்திலேயே தேர்தல் இடம்பெற்றது.

ஜெனரல் சால்ஸ் டி கோல் 1958ல் நிறைவேற்று அதிகாரத்துடனான புதிய அரசியல் யாப்பை அறிமு கப்படுத்தியதன் பின்னர் (இன்றும் அதே அரசியலமைப்பே இருக்கிறது) கடந்த 60 ஆண்டுகளாக பிரான்சை ஆட்சிசெய்த கட்சிகளான ஒன்று ரீபப்ளிகன் கட்சி, அல்லது சோஷ லிச கட்சியாகும். ஆனால் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் புதிய கட்சியான En Marche கட்சியின் இம்மானுவேல் மெக்ரோன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பழைய கட்சிகள் எவ்வளவு கவலைக்கிடமான நிலைக்கு போய் விட்டதென்றால் அவர்கள் எவரும் இரண்டாம் சுற்றுக்கு கூடத் தெரி வாகவில்லை. ஏப்ரல் 23ம் திகதி இடம்பெற்ற முதலாவது சுற்று வாக்கெடுப்பில் முன்னணியில் இருந்த வேட்பாளர் நால்வரில் மூவர் புதிய அரசியல் கட்சியை பிரதிநிதித்துவம் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்த மூன்று கட்சி களுக்கும் பாராளுமன்றத்தில் உறு ப்பினர்கள் கிடையாது.

2012 முதல் ஆட்சிலிருந்த, ஜனாதிபதிப் பதவி, பிரதமர் பதவி மற்றும் பாராளுமன்றத்தில் அதிகாரத்தை தம்வசம் கொண்டிருந்த சோஷலிசக் கட்சி முதலாவது சுற்றில் ஐந்தாம் இடத்திற்குத் தள் ளப்பட்டது. அந்தக் கட்சி பெற்ற வாக்குகள் 6.36% வீதமாகும் அது கடந்த 60 ஆண்டுகளில் சோஷலிசக் கட்சி அடைந்த படுதோல்வியாகும். டீசநஒவை முடிவுகளும் ஐக்கிய அமெரிக்க ஜனாதபதித் தேர்தலில் ட்ரம்பின் வெற்றியும் பிரான்ஸ் வலதுசாரி இனவாதத்துடனான தேசிய முன்னணி பிரதேச தேர்தல்களில் பெற்றிருந்த தேர்தல் வெற்றியுடன் பலர் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தேசிய முன்னணியின் வேட்பாளர் மெரின் லா பென் தேர்ந்தெடுக்கப்படுவாரென எதிர்பார்த்தனர் ஆனால் இரண்டாம் சுற்றில் மற்றைய கட்சிகளுடன் கூட்டுச்சேர முடியாது போனதன் காரணமாக அவர் தோல்வியடைந்தார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் இம்மானுவேல் மெக்ரோன் சர்வதேச ரீதியாக அவ்வளவு பிரபல்யமானவர் அல்ல. அவர் பிரங்சுவா ஹொ லந்தேயின் சோஷலிசக் கட்சி அரசாங்கத்தில் பொருளாதார, கைத்தொழில் மற்றும் டிஜிட்டல் நடவடிக்கைகள் விவகார அமைச்சராக இருந்தார். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அவர் அமைச்சர் பதவியிலிந்தும் சோஷலிசக் கட்சியிலிருந்து விலகி En Marche அமைப்பினை நிறுவினார் அவரைப் பொறுத்தவரையில் அது வலதுசாரியும் இல்லாத இடதுசாரியும் இல்லாத இயக்கமாகும்.

இதற்கு முன்னர் நடந்தவைகளின்படி, இம்முறை தேர்தலில் கூடுதலான வாய்ப்பு ரீபப்ளிகன் கட்சியின் வேட்பாளர் பிரங்சுவா பிலனுக்கே இருந்தது. ஆனால் அவர் மீது தொடுக்கப்பட்ட ஊழல் மோசடி குற்றசாட்டுக் காரணமாக அவரது வா ய்ப்பு மங்கிப்போனது. மறுபுறத்தில் நிதித்துறையின் பெரும் புள்ளிகளின், பெரும் வியாபாரப் புள்ளிகளின், ஊடகத் துறையின் பெரும் புள்ளிகளின் ஆதரவு மெக்ரோனுக்கே கிடைத்தது.

ஏகாதிபத்திய நாடுகளில் தோன்றியுள்ள பொருளாதார நெரு க்கடியும் அதன் மூலமாகத் தோன்றிய சமூக பொருளாதார நெருக்கடியின் காரணமாக சம்பிர தாயபூர்வமான கட்சிகளைப் பின்தள்ளிவிட்டுப் புதிய கட்சிக்கான வாய்ப்பு அதி கரித்திருந்தமை பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்பட்டது. ஆ னால் புதிய கண்ணோட்டத்தில் பார்த்தாலும், மெக்ரோனின் En Marche இயக்கமும் சம்பிரதாய சீர்திருத்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்ற கட்சியாகும். மெக்ரோன் ஐரோப்பிய சங்க வாதியாவார். நவ லிபரல்வாதியாவார். சுதந்திர வர்த்தக்கத்தை வரவேற்கும் நபராவார். அதனால் நிதித்துறை பெரும் புள்ளிகளின் ஆதரவு அவருக்கு கிடைத்தமையையிட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிரான்ஸ் புதிய ஜனாதிபதிக்கு இன்னுமொரு சவால் இருக்கிறது. அதாவது அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பிரான்ஸ பாராளுமன்ற அதிகாரத்தை தமது கட்சிக்கு பெற்றுக்கொள்வதாகும். தேர்தலில் அவர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வே ண்டுமானால், பாராளுமன்றத்தில் பலமான நிலைக்கு வரவேண்டியது முக்கியமானதாக அமைகிறது.

தொடர்ச்சி 11ம் பக்கம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச இயந்திரம் இராணுவமா? அரசாங்கமா?

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் அவர்கள் தமது சகாக்கள் சிலருடன் இராணுவத் தலைமையத்திற்குச் சென்றுள்ளார். இராணுவத் தளபதியைச் சந்தித்துக் காணி விடுவிப்புச் சம்பந்தமாகப் பேசியுள்ளார். இராணுவத்தினால் கபளீகரம் செய்யப்பட்ட காணிகள் வடகிழக்குப் பிரதேசங்களில் இன்றுவரை முழுமையாக விடுவிக்கப்படவில்லை அரசாங்கம் பதவியேற்று இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் மக்கள் உண்ணாவிரதப் போராட்டங்களையும் கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நடாத்தி வருகின்றனர். அரசாங்கம் என்பது முதலாளித்துவ அரசின் ஒரு நிர்வாகமாகும் அதேபோன்றதொரு நிர்வாகத்திலொன்றே இராணுவமாகும் எனவே அரசு வேறு அரசாங்கம் வேறு அரசாங்கத்தை வழிநடத்துவது அல்லது கட்டுப்படுத்துவது இராணுவமே. பெயரளவிலான ஆட்சித்தலைமையுடன் பேசிப்பேசிப் பயன் எதுவும் இதுவரை கண்டிராத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டரை வருடங்களின் பின் இராணுவத் தலைமையுடன் பேசுவதற்குச் சென்றுள்ளது. ஒரு இலட்சத்து 50 ஆயிரம் படையினரை வடக்கு கிழக்கில் நிலைகொள்ள வைத்த பெருமை கடந்த ராஜபக்ஷ ஆட்சியினரையே சாரும். இப்போதும் அவர்கள் பதவியில் இருந்திருப்பார்களேயானால் காணி விடுவிப்புச் சம்பந்தமாகப் பேசியிருக்க இடம் இருந்திருக்காமல் போயிருக்கும். தமிழ்ச் தேசியக் கூட்டமைப்பு இப்போது எண்ணிக் கொண்டிருக்கும் அரசின் உருவம் புத்தரைப் போன்றிருக்கும் என்பதாகும். இணக்க அரசியல் ஆரம்பிக்கு முன்னரே ஆட்சியாளர்கள் புத்த போதனையின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் துணைக்கு அழைத்திருந்தனர். இவர்களும் ஆட்சியாளரைப் பாதுகாப்பதில் முக்கியமான சந்தர்ப்பங்களில் உதவியுள்ளனர். உதாரணமாகக் குறை நிரப்புப் பிரேரணையில் ஆதரவளித்து வாக்களித்து ஒருமுறை ஆட்சியைக் காப்பாற்றியுள்ளனர்.

இந்த லட்சணத்தில் இவர்களின் வர்க்க அரசியலும் ஆட்சியாளரின் வர்க்க அரசியலும் ஒன்றேயாகும். இராணுவத்திற்குத் தேவையுடைய காணிகள் தயவு தாட்சணியமின்றிச் 'சுவீகரிக்கும் உரிமை அரசிடம் உள்ளது. அரசு தனது பாதுகாப்பிற்கென்றே இராணுவத்தினூடாகக் காணிகளை அபகரித்து வைத்துள்ளது முதலாளித்துவ மேட்டுக் குடியினர் தென்னிலங்கையிலும் மலையகத்திலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தமது காணிப் பத்திரத்தின் மூலம் அபகரித்து வைத்துள்ளனர் அவர்கள் காணிகளில் எவ்வித பயன்தரும் முயற்சியும் செய்யாமல் காடுகளாக வைத்திருக்கின்றனர். பாமர மக்கள் பலர் குடியிருக்கக்கூட நிலமின்றி வாழ்கின்றனர் இதைத்தட்டிக் கேட்டால் ஆட்சியினர் மழுப்பும் பதில்களே அளிக்கின்றனர். வளமுள்ள காணிகளைப் பிடிப்பது மேட்டுக்குடி ஆட்சியாளருக்கும் இராணுவத்திற்கும் கைவந்த கலையாகும். தமிழ் மக்கள் தமது ஏற்கனவே வாழ்ந்த வாழ்விடங்களையே கோருகின்றனர் அதற்கான போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும் தருணத்தில் இராணுவத்திடம் காணியை விடுமாறு சமாதானம் பேசத்தமிழ் தேசியக்கூட்டமைப்பு சென்றுள்ளது. இதுவரை பாராளுமன்றத்தில் தமது சகாக்களுடன் இணக்க அரசியல் நடத்துபவர்கள் ஜனாதிபதியவர்களுக்கே நிறைவேற்றதிகாரம் இருக்கிறது என்று இவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டதா? இனிவரும் அரசியற்குழப்ப நிலைகளில் காணிவிடுவிப்பு மக்கள் போராட்டத்தினூடாகவே சாத்தியப்படும் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களும் போராட்டத்தில் ஈடுபடாமல் முதலாளித்துவ அரச இயந்திரத்தைப் பணிய வைக்கும் முயற்சி தோல்வியிலேயே முடியும்.

# பாலஸ்றதீன மனுவுக்கு ஜே.வி.பி ஆதரவு



முதலாளித்துவம் அதன் இறுதிக் கட்டமான ஏகாதிபத்தியத்தை கடந்துக்கொண்டிருக்கும் நிலையில் அதன் நெருக்கடி உக்கிரமடைந்துக் காணப்படுகிறது. அதன் காரணமாக ஏகாதிபத்திய முகாம் இன்னுமொரு உலக யுத்தத்திற்கு கையசைத்து நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான முயற்ச்சியல் ஈடுபட்டு வருகிறது. ஏகாதிபத்திய முகாமின் பிரதானியான ஐக்கிய அமெரிக்கா தமது பிரிவினைவாதத் திட்டத்தை விரிவுப்படுத்தி நாடுகளுக்கிடையில் அந்நாடுகளில் பல்வேறுக் குழுக்களைப் உருவாக்கி அதனை பயன்படுத்தி முரண்பாடுகளை தோற்றுவித்தும், கலகங்களையும் தோற்றுவித்தும் வருகிறது. 1947ம் ஆண்டு பாலஸ்தீன பூமியில் இஸ்ரவேல் அரசை ஸ்தாபிப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவின் தேவையினை ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக நிறைவேற்றிக் கொண்டது. அத்தோடு நிற்காத அவர்கள் இஸ்ரவேல் ஊடாக கட்டவிழ்துவிடப்பட்ட யுத்த நடவடிக்கைகள் காரணமாக இன்றும் கூட பாலஸ்தீன மக்களுக்கு தாங்களுக்கே உரிய நாடு இல்லாத நிலை காணப்படுகிறது.

இஸ்ரவேல் பாலஸ்தீனத்தின் மீது தொடுக்கப்படும் அழுத்தம் தொடர்பான புதிய செய்தி என்னவெனில் விடுதலைக்காக இஸ்ரவேல் சிறைகளில் உண்ணாவிரதம் இருந்துவரும் பாலஸ்தீன கைதிகளுக்கு பலவந்தமாக உணவைப் பெற்றுக்கொடுப்பதற்காக இஸ்ரவேல் சிறைச்சாலை அதிகாரிகள் எடுத்த தான்தோன்றித்தனமான நடவடிக்கையாகும். விசேடமாக இஸ்ரவேல் மருத்துவர்கள் கூட இவ்வாறு பலவந்தமாக உணவைப் பெற்றுக் கொடுப்பதை நிராகரித்திருக்கும் நிலைமையின் கீழ் வேறு நாடுகளை சேர்ந்த வைத்தியர்களை கொண்டு வந்தேனும் பலவந்தமாக உணவைப் பெற்றுக்கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவு நிலைமையை மேலும் உக்கிரமடையச் செய்துள்ளது. இந்த எதேச்சதிகாரமான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யும் படி இஸ்ரவேல் அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காகவும் உலகம் முழுவதிலும் உள்ள பாலஸ்தீன தூதரகங்களில் மக்கள் மனு கைச்சாத்திடல் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மக்கள் விடுதலை முன்னணியும் பாலஸதீனத்தின் தன்னாதிக்கத்திற்காக நீண்ட காலமாக தனது ஆதரவைத் தெரிவித்து வருவதோடு உலகத்தின் எந்தவொரு நாட்டின் மீதும் தொடுக்கப்படும் ஏகாதிபத்திய அழுத்தங்களுக்கு எதிராக அந்நாடுகளால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளோடு மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்துள்ளது.

கடந்த மே 7ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவம் செய்து அதன் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க இலங்கையில் அமைந்துள்ள பாலஸ்தீன தூ தரக அலுவலகத்தில் அம்மனுவில் கைச்சாத்திட்டார். இஸ்ரவேலின் இந்த நடவடிக்கைகள் தொடர்பாக தமது கடுமையான எதிர்ப்பினையும் இலங்கை பாலஸ்தீன தூதுவர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி 11ம் பக்கம்...

1ம் பக்கம் தொடர்ச்சி..

## வெள்ளப் பெருக்கிலும்...

மேலாக செயற்பட்ட ராஜபக்ஷ மகன்மார்களும் வெத்து மனிதர்களாகவே இதில் காட்சியளித்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் செந்தாரகை நிவாரணப் படையணியால் பல மாவட்டங்களில் மக்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்தல், அத்தியாவசியப் பொருட்களை பகிர்ந்தளித்தல், மருத்துவ முகாம் நடத்துதல், நீர் குறைந்தப் பின்னர் வீடுகளை சுத்தம் செய்தல் போன்ற நிவாரண வேலைகள் முன்னெடுக்கப்பட்டது. அதற்காக மக்களிடமிருந்து கிடைத்த பொருட்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் எம்.பிகளின் சம்பள நிதியிலிருந்து பெற்றுக்கொண்ட நிதியுதவிகளை பயன்படுத்தி கொள்ளப்பட்டது. அரசாங்க அதிகாரமின்றி இவ்வகையான விரிவான பங்களிப்பினை செய்வதற்கு மக்கள் விடுதலை முன்னணியினால் முடிவுமாயிருந்தமையை முன்னிட்டு மக்கள் விடுதலை முன்னணி செந்தாரகை அமைப்பின் நடவடிக்கையான கடந்த இரண்டு தசாப்தங்களை மேற்கொண்ட நடவடிக்கைகளின் இன்னுமொரு தொடர்ச்சியாகும். அரசாங்கம் என்ற வகையில் இவ்வளவு பின்னடைவு ஏற்பட்டிருக்கும்போது தொண்டர் அமைப்புகளின் செயற்பாடும் நடவடிக்கைகளும் பொதுவாக மக்களிடமிருந்து கிடைத்த பங்களிப்பும் பாதுகாக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மாத்திரமல்ல நிம்மதியாகவும் இருந்ததாக பாதிக்கப்பட்ட அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

6ம் பக்கம் தொடர்ச்சி..

## அதிகாரம் மக்களிடமே உள்ளது...

வின் கூட்டத்திற்கு வந்துள்ளனர். அனால் அதில் கலந்துக்கொண்ட மக்களை பார்க்கின்றபோது அவர்கள் எப்போதும் ராஜபக்ஷாவுடன் இருந்த மக்களேயாகும். புதிய முகங்கள் புதிய சக்திகளின் அறிகுறிக் கூடத் தென்படவில்லை என்பதே உண்மை. அந்த பழைய கள்வர்களே மேடையில் அமர்திருந்நதார்கள். அவர்கள் கசிப்புக்கு விலைபோன, சோற்று பார்சலுக்கு விலைபோன, சாராயத்திற்கு விலைபோன ராஜபக்ஷவுடன் எப்போதும் இருந்தவர்களே அன்றும் இருந்தார்கள் இன்றும் இருக்கிறார்கள். ராஜபாக்ஷ ாவால் ஆட்சியை கைபற்றுவது ஒருபோதும் சாத்தியப்படாத விடயமாகும். அரசாங்க கட்சியை விட ராஜபக்ஷாவின் கூட்டத்திற்கு மக்கள், கலந்துக்கொண்டது மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலாகும். அவ்வாறு வெறுப்படைந்திருக்கும் மக்களை ராஜபக்ஷாவால் பழைய உறவுகள், பழைய ஊடகத் தொடர்புகள், கொள்ளையடிக்கப்பட்ட பழைய பணம் அனைத்தையும் பிரயோகித்து கருத்தியலை உருவாக்க முயலுகின்றனர்.

உண்மையாகவே, இது ஒரு சவால். இது சவாலாக அமைவது, நாட்டின் ஒருசில மனிதர்கள் கதிரையில் அமர்ந்துக்கொண்டு தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருக்கையில், சுகமாக அரசியல் பேசும்போதும், நல்லதோர் நாடு உருவாகுமென பார்த்துக்கொண்டிருப்பதால், நாங்கள் அரசியிலில் மாற்றத்தை எதிர்பார்க்கின்ற அனைவருக்கும் ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும், மனிதர்கள் தயாரில்லாத வரைக்கும் நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்படாது என்பதை கூறியே ஆக வேண்டும். நியாயமான அரசியல் சூழலை உருவாக வேண்டுமென்றால், மனிதர்கள் என்ற வகையில் நாம் சில அர்பணிப்புகளை செய்தாக வேண்டும். மக்கள் அரசியலில் நேரடியாக ஈடுபட வேண்டும். அவர்கள் தொழிற்சங்கங்களில் அமைப்பு ரீதியாக அணிதிரள வேண்டும். "ஐயோ நாங்கள் எங்கள் வேலையை பார்த்துக் கொள்கிறோம்" என்று கூறாது கிராமத்தில் பொதுவான பிரச்சினைகளுக்காக செயற்படுவதற்கு முன்வர வேண்டும். மக்கள் விடுதலை முன்னணி என்ற வகையில் நாங்கள் இந்த உண்மையை மக்களுக்கு தெரிவிக்கின்றோம். நாங்கள் மாவட்ட மாநாடுகளை நடத்தி, மாவட்டத்தில் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து கிராம மட்டத்தில் சென்று நாங்கள் மக்களுக்கு பிரச்சினைகளை எடுத்து கூறுகின்றோம். செஞ்சக்தியின் ஊடாக நமது நாட்டு மக்களிடமும் விசேடமாக இதை வாசிக்கின்ற ம.வி.மு அங்கத்தர்களிடமும் கேட்டுக்கொள்வது, அதிகாரம் மக்கள் கைகளிலேயே இருக்கிறது. அவர்களை விழிப்படையச் செய்யாது கட்சி விழிப்படைந்தால் மட்டும் ஆட்சியை கைபற்ற முடியாது. அதனால் மக்களே விழிப்படைய வேண்டும். அவ்வாறு விழிப்படைகின்ற மக்களுக்கு தலைமைத் தாங்க மக்கள் விடுதலை முன்னணியால் முடியும். அதற்காக ம.வி.மு ஆகிய நாம் உயரிய அர்பணிப்புடன் திடமான நம்பிக்கையுடன் சுபமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

05ம் பக்கம் தொடர்ச்சி..

## மெதமூலனவில் கனவுகளும்...

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கோ மகிந்த அணிக்கோ அதிகாரத்திற்கு வருவதற்கான வழிகிடையாது.

அதேபோன்று பொதுத் தேர்தல் வந்தால் மகிந்த நாடு முழுவதிலும் வாக்குகேட்பவராக இருக்கப்போவதில்லை. அதில் அவர் ஒரு மாவட்டத்தில் வேட்பாளராகவே போட்டியிட முடியும். அதன்போது மஹிந்தவின் மனநிலைக்கு சாதகமாக அமையப்போவதில்லை. பொதுத் தேர்தல் என்பது வித்தியாசமானதாகும். ஸ்ரீலசுக இரண்டாகப் பிளவுபட்டிருப்பது, மகிந்தவை சுற்றியிருப்போர் பலருக்கு ஊழல் மோசடி வழக்கு போடப்பட்டிருக்கின்றமை, அவர்கள் தேர்தலில் வசீகரமானவர்களாக இல்லாத நிலையும் மகிந்த அணியினருக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதற்கான வாய்ப்பே கிடையாது. 2015 தேர்தலில் மகிந்த மைத்திரி இருவரும் சேர்ந்திருந்தபோதிலும் கூட 100 ஆசனங்களைக் கூட பெற முடியாது போய்விட்டது. தற்போது கட்சி பிளவுப்பட்டு, வழக்குகள் தொடுக்கப்பட்டு பலவீனமடைந்திருக்கும் நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கத்தை அமைப்பதென்பது சாத்தியமற்ற விடயமாகும்.

மறுபுறத்தில் அரசியல் அசைவுகளை உற்று நோக்கும்போது தெரிவதென்ன? அரச எதிர்ப்பு பிம்மாண்டமான சக்தியொன்று, அரசாங்கத்தை தோற்கடிப்பதற்குப் போதுமான அரச எதிர்ப்புச் செயற்பாடுகளை கைபற்ற மகிந்த அணியால் முடியாது போயிருக்கிறது. தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரச எதிர்ப்பு போராட்டங்களுக்கு மகிந்த அணியால் நெருங்கவும் முடியாதிருக்கிறது. சயிட்டம் ஆரம்பித்தது மகிந்தவின் ஆட்சியில் என்பதாலும், அதற்கு வங்கிக் கடனையும் வழங்கி உதவி செய்ததினால், போராட்டத்தை தமது கைகளுக்கு எடுக்கவோ பங்களிப்புச செய்யவோ மகிந்தவால் முடியாதுள்ளது. விவசாயிகளின் போராட்டத்திலும் நாட்டு வளங்களை விற்பதற்கு எதிரான போராட்டத்திலும் மகிந்தவை ஒரு பொருட்டாக கருதுவதில்லை. சுயிட்டம் போராட்டத்தில் வேறு சுலோககங்களை இணைத்து மகிந்தவை இணைத்துக் கொள்வதற்காக பாதெனிய (அரச மருத்துவர் சங்கம்) மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளது. அதனால் மகிந்த மக்கள் போராட்டங்களில் இணைய முடியாது வெளியிலே நிற்கிறார்.

அண்மையில் இந்திய எதிர்ப்பை வெளிப்படுத்தி, "தேசப்பற்றை" உசுப்பேற்றி உருவாக்குவதற்கு மகிந்த அணியில் சிலர் முயன்றபோதிலும் மகிந்த ராஜபக்ஸ இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது இந்திய பிரதமரை சந்தித்தன் மூலம் இந்திய எதிர்ப்பு போராட்டம் பிசகிப் போனது. கடந்த இரண்டு வருடத்தில் ராஜபக்ஸ அணியில் புதிதாக இணைந்தவர் எவரும் கிடையாது. மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்திலெடுக்கும்போது தெரியவருவதாவது அதிகாரத்தை கைபற்றுவதற்கான ராஜபக்ஸ ாக்களின் கனவு வெறும் கனவு மட்டுமேயாகும்.

மறுபுறத்தில் நாட்டின் அரசியலின் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும் இலங்கையில் 70 வருட அரசியல் பயணத்தில் அனுபவங்களாலும் கேட்பது, இனியும் சாதாரண ஆட்சி மாற்றமல்ல சமூக முறையில் ஆழமான மாற்றங்களை செய்யக்கூடிய ஆட்சியாகும். முதலாளி வர்க்கத்தின் தனியானதும் பலம் வாய்ந்த ஆட்சிக்கான காலம் முடிவடைந்துள்ளது. நாட்டில் பாரிய மாற்றத்தைச் செய்வதற்கு மக்களால் முடியாதுபோனால் மீண்டும் முதலாளித்துவ கூட்டு அரசாங்கமே உருவாகும். விசேடமாக 19வது திருதத்தின் மூலம் அமைச்சரவை எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதினால் மேலதிக அமைச்சர்களை எடுப்பதென்றால் கூட்டு அரசாங்கம் உருவாக்கப்பட்டே ஆக வேண்டும். அதனால் எதிர்வரும் காலங்களில் முதலாளித்துவ கட்சிகள் கூட்டு அரசாங்கத்தை உருவாக்குவது தவிர்க்க முடியாது. ஆனால் இந்நாட்டு மக்களும் முற்போக்குச் சக்திகளும் நாட்டை கொண்டுச் செல்ல வேண்டியது, அந்த கவலைக்கிடமான நிலைய நோக்கியல்ல. தற்போது நாட்டிற்கு ஆழமான அரசியல் சமூக மாற்றம் தேவைப்படுகிறது. முதலாளித்துவத்தின் நெருக்கடியும், ஆளும் தரப்பினரின் பலவீனமும், ஸ்ரீலசுகவின் பிளவும், ஐதேகவின் பலவீனமும் நிர்மாணித்திருக்கும் அரசியல் நிலைமையை மிகவும் சாதகமாக அமைவது மாற்றுச் சக்திக்காகச் செயற்படும் மாற்று அரசியல் இயக்கத்திற்காகும்.

அதனால் உக்கிரமடைந்துவரும் முதலாளித்துவ நெருக்கடியின் முன்னால் நாளைய தினத்தில் உருவாக்க முடிவதும் உருவாக்க வேண்டியதும், தட்டுமாற்று அரசியலின் தொடர்ச்சியாக இன்னுமொரு முதலாளித்துவக் கும்பலின் ஆட்சியல்ல நாட்டை மாற்றுகின்ற இடதுசாரி மற்றும் முற்போக்குச் சக்திகளின் தலைமையில் உருவாக்கப்படும் புதிய ஆட்சியாகும். அதற்காக செயற்படுவது அனைவரதும் கடப்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்றிகார ஜனாதிபதிப் பதவியை இல்லதொழிப்பதற்கான போராட்டத்திற்கு பிரவேசித்தாக வேண்டும்.



2015 ஜனவரி 08ம் திகதி ரணில-மைத்திரி நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரதானமான ஒன்று நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதென்பதை நினைவுபடுத்திய ஜே.வி.பி தலைவர் தோழர் அனுர திசாநாயக்க மைத்திரிபால சிரிசேனாவுக்கு மக்கள் ஆணை கிடைத்தது நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதற்கே தவிர அதை பாதுகாப்பதற்கல்ல அதனால் மக்கள் விடுதலை முன்னணியான நாம் எதிர்வரும் நாட்களில் அதை ஒழிப்பதற்கான போராட்டத்திற்கு பிரவேசிக்கப் போவதாக தெரிவித்தார்.


அவர் இதை கடந்த 03ம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்குபோது...

"புதிய அரசியலமைப்பாகவோ அல்லது திருத்தமாகவோ நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லதொழித்தல், புதிய தேர்தல் முறையை தயாரிப்பது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக யாப்புரீதியான பாதுகாப்பினை பெற்றுக் கொடுப்பது போன்ற விடயங்கள் அரசிலமைப்பில் கட்டாயமாக்கப்பட வேண்டும். அதனால் நாங்கள் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளோம். அதேபோன்று ஜனாதிபதி அவர்களையும் சந்தித்து இதுபற்றி கலந்துரையாடவுள்ளோம். ஏனென்றால் அவர் வழங்கிய வாக்குறுதிக்கு இப்போது இரண்டரை வருடம் கடந்துள்ளது. அதற்காக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளல், சர்வசன வாக்கெடுப்புக்கு செல்லல் போன்ற காரணிகள் உள்ளன. அதனால் இதற்கு இணங்கக்கூடிய கட்சிகள் அமைப்புகள் அனைத்துடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த ஊடக சந்திப்பின்போது அரசாங்கம் முகம்கொடுக்கின்ற பொருளாதார நெருக்கடியின் முன்னால் ஜனநாயகத்தை துண்டிப்பதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். அதன் மூலம் ஏற்படப்போகும் அச்சுறுத்தலையும் தெளிவுபடுத்தினார். அதனால் அரசாங்கத்தின் இந்த அச்சறுத்தலுக்கு எதிராக பிரம்மாண்டமான மக்கள் அரணை கட்டியெழுப்ப வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிட்டால் மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தை உடைத்து நெருக்குவதற்கான நடவடிக்கைகயை அரசாங்கம் எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

"தற்போது அரசாங்கம் அடக்குமுறை நடவடிக்களை நோக்கி நகர்ந்து வருகிறது. மருத்துவ அதிகாரிகள் மீது மாணவர்கள் மீது, விவ சாயிகள் மீது, அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் மேதினத்தில் வழங்கியப பாடத்தை கற்றுக்கொள்வதை விட போராடுகின்ற மக்கள் மீது அடக்கு முறையை நீட்டுவதற்கு தயாராகி வருகிறது. அதை தோற்கடிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். இந்த செயதியாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸவும் கலந்துக்கொண்டார்.

### வெளிநாடுகளில் மக்கள் விடுதலை முன்னணியின் மேதின ஊர்வலங்கள்










## அரசாங்கம் மக்கள் ஆணையை புறம்தள்ளி கசாப்புக் கடைகாரனை பாதுக்காக்கிறது.

**மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா**



கடந்த 17ம் திக்தி இடம்பெற்ற சயிட்டம் கசாப்புக் கடைக்கு எதிராக மாணவர்கள் நடத்திய அமைதிப் பேரணிக்கு பொலிசாரை ஏவிவட்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட தாக்குதலை வண்மையாக கண்டிக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி அது தொடர்பில் ஜே.வி.பி தலைமையகத்தில் இட்மபெற்ற செயதியாளர் மாநாட்டில் கருத்தத் தெரிவித்த அதன் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு...

"மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அரசாங்கம் அதை தீர்ப்பதற்குப் பதிலாக மாணவர்கள் குற்றவாளிகளைப் போன்று தாக்கப்பட்டனர். அதில் 10 மாணவர்கள் படுகாயமடைந்தனர். 20க்கும். அதிகமானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் இந்த நியாயமான போராட்டத்திற்கு எதிராக அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிட்டப்பட்ட தாக்குதலை மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம். அதேபோன்று சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மாணவர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலைச் செய்யும்படி அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

சயிட்டம் நிறுவனத்தை மூடும்படி கேட்டு மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், மாணவர்கள், பெற்றோர்கள், மருத்துவர்கள் சயிட்டம் கடை கசாப்புக் கடை என்ற காரணத்தினாலேயே போராடினர். அரசாங்கம் மக்களின் குரலுக்கு செவிமடுப்பதற்குப் பதிலாக, இந்த கசாப்புக் கடையை பாதுகாப்பதற்கு முயற்சித்து வருகிறது. மக்களின் எதிர்ப்பினை அடக்குமுறையால் அடிபணிய வைக்க முயல்கிறது. இது மக்களின் போராட்டம், அரசாங்கம் இதற்கு செவிமடுக்காதததினால் தான் யாப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டடிருக்கும் கருத்துக்களை வெளியிடும் உரிமையை பாவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறது. அதேவேளை மாணவர்கள் மீதான தாக்குதல் சற்றேனும் மனிதாபிமானமற்ற முறையிலே இடம்பெற்றது. அதாவது மனிதநேயமறற் அரசாங்கத்தைப் போனறாகும். அவ்வாறு செய்து அரசாங்கம் சயிட்டம் நிறுவனத்தைப் பாதுகாக்கிறது. சயிட்டம் என்பது கசாப்புக் கடை. மக்களை ஏமாற்றி, மாணர்களை ஏமாற்றி வஞ்சனையாக முன்கொண்டுச் செல்லப்படும் கடையாகும்.

ஒரு நாட்டில் கல்வி தனியார்மயமாக்கப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவையாகும். நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இன்னமும் அரசாங்கத்தின் உதவியிலேயே தங்கி வாழுகின்றனர். நாட்டின் பெரும்பான்மையான மக்களின் வருமானம் நாளொன்றுக்கு 2 டொலருக்கும் குறைாவாகும். அவ்வாறான நாட்டில் வாழும் மக்களுக்கு பிள்ளைகளின் கல்விக்காக 120 - 125 இலட்சம் ரூபாய் தேட முடியுமா? அதனால் இந்த அரசாங்கம் நாட்டின் எதிர்காலத்துடனேயே. விளையாடி வருகிறது. தனியார் கல்வியினால் ஏற்பட்ட விளைவுகளை அண்மையில் எமக்கு கேட்க கூடியதாயிருந்தது. ஒரு இளைஞன் வங்கியொன்றை கொள்ளையடித்து பொலிசில் மாட்டிக் கொண்டார். தேடிப்பார்க்கின்றபோது அவர் ரஷ்யாவில் தனியார் பல்கலைக்கழகமொன்றின் மருத்துவப் பீட மாணவனாகும். பணம் இல்லாததால் மருத்துவர் ஆக இருந்த மாணவர் கொள்ளைக்காரனாக் ஆகியுள்ளான். அதேபோன்று ஐரோப்பிய நாடுகளில் மாணவிகள் தமக்கு படிப்பதற்கு பணம் இல்லாததால் தமது உடலை விற்பதற்கு விளம்பரம் போட்டுள்ளனர். இவ்விதமாக வங்கியில் கொள்ளையடிப்பதற்கும், உடலை விற்பதற்கும், போதைப்பொருள் விற்பதற்கும், திருடுவதற்குமான நிலை ஏற்படுமானால் எதிர்காலத்தில் உருவாகப்போவது வைத்தியர்கள். அல்ல குற்றவாளிகளாகும். அதனால் தான் இலவசக் கல்வியை ஒழிக்க வேண்டாமென நாம் அரசாங்கத்தைக் கேட்கின்றோம். ஆனால் அரசாங்கம் அதற்கு எதேச்சதிகார முறையிலும் தான்தோன்றித்தனமாகவே நடந்துக்கொள்கிறது.

நாம் அரசாங்கத்திற்கு இரண்டில் ஒன்றை தெரிவு செய்யும்படி அச்சுறுத்தல் விடுக்கின்றோம். சயிட்டத்தை தேர்ந்தெடுத்து அரசாங்கத்தின் இருப்பை கைவிடுவதற்கோ சயிட்டத்தை ஒழித்துவிட்டு அரசாங்கத்தை பாதுகாத்துக் கொள்ளும்படி நாம் அரசாங்கத்திற்கு அறிவுறுத்துகின்றோம். இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக கல்வியை தனியார்மயமாக்குவதற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி சகல சக்திகளையும் ஒன்றிணைத்துப் போராடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தரமுள்ள, பெலவத்த, பன்னிபிட்டிய வீதி,464/20ல் வசிக்கும், எம். ரில்வின் சில்வா ஆகிய நான் இலக்கம் 43/20, நுககஹ பிளேஸ், பிலியந்தலை வீதி, மகரகமவில் அமைந்த நியமுவா வெளியீடு நிறுவனத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.